# மார்னிங் டைம்ஸ்

mornningtimes@gmail.com

முயன்றால் முடியும்!

தமிழ்மாத இதழ்

## 2026 சிறப்பு மலர்













# பொழிச்சலூர் மரியநிவாஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியின் சாதனைகள்!




செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் அடுத்துள்ள பொழிச்சலூர் ஊராட்சி பஜனை கோயில் தெருவில் தமிழக அரசால் அங்கீகரிக் கப்பட்ட ISO 9001:2015 சான்றிதழ் பெற்ற வரதம்மாள் கல்வி அறக்கட்டளை மூலம் செயல்பட்டு வரும் மரிய நிவாஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி கல்வி, விளையாட்டு மற்றும் ஒழுக்கப் பயிற்சிகளில் சிறந்து விளங்கி வருகிறது.

இப்பள்ளியில் PRE-KG முதல் +2 வரை வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. பள்ளியின் நிறுவனர் தலைவர் J. ரங்கநாதன், தாளாளர் R. பத்மினி, துணைத் தலைவர் K.R.ராகவேந்திரன் ஆகியோர் சிறப்பான வழிகாட்டுதலுடன் பள்ளியை முன்னேற்றி வருகின்றனர். தலைமை ஆசிரியர் V.விஜயகுமாரி, உதவி தலைமை ஆசிரியர் C.தனசேகரன் ஆகியோர் நிர்வாக பொறுப்பில் பள்ளியை திறம்பட நடத்தி வருகின்றனர்.

ஒவ்வொரு பாடத்திற்கும் தகுதி பெற்ற ஆசிரியர்கள் மூலம் தரமான கல்வி வழங்கப்படுகிறது. கல்வியுடன் இணைந்து கராத்தே, சிலம்பம், யோகா போன்ற கலைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மேலும், குழந்தைகள் பூங்கா, விளையாட்டு மைதானம், அறிவியல் மற்றும் கணினி ஆய்வகங்கள், STEM ஆய்வகம், SMART CLASSES போன்ற நவீன வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் விஜயதசமி தினத்தில் சிறப்பு அட்மிஷனும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

**ஏபிஜே அப்துல் கலாம் பிறந்தநாளை முன்னிட்டு கலை-அறிவியல் கண்காட்சி**

முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் அக்டோபர் 15 பிறந்தநாளை முன்னிட்டு, பள்ளியில் 2 நாட்கள் கலை–அறிவியல் கண்காட்சி நடைபெற்றது.

பள்ளியின் நிறுவனர் தலைவர் J.ரங்கநாதன், தாளாளர் R.பத்மினி ஆகியோரின் பரிந்துரையின்படி, துணைத் தலைவர் K.R.ராகவேந்திரன் தலைமையில், தலைமை ஆசிரியர் மற்றும் உதவி தலைமை ஆசிரியர் முன்னிலையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. LKG முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள மாணவ, மாணவிகள் ஏபிஜே அப்துல் கலாம் உருவப்படங்கள், பேட்டரியால் இயங்கும் ரோபோ, சென்சார் மின் விளக்குகள், தானியங்கி நீர்ப்பாசன கருவிகள் காற்றாலை, மொபைல் டவர், சிறுவர் பூங்கா, ஸ்ரீவில்லிபுத்தூர்

கோயில் கோபுரம், மரியநிவாஸ் பள்ளியின் கட்டிடத்தை வடிவமைத்து அதில் பள்ளியின் முன்னாள் தாளாளர் மறைந்த R.பரமேஸ்வரி அவர்களின் திருவுருவப்படம் இடம்பெற்றது அனைவரையும் நெகிழ்ச்சியடையச் செய்தது.

கலை–அறிவியல் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த LKG வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்கள் தாங்களே தயாரித்து காட்சிப்படுத்திய அனைத்து திட்டங்களையும் பள்ளியின் துணைத் தலைவர் K.R.ராகவேந்திரன் அவர்களிடம் விளக்கமாக எடுத்துரைத்தனர். மாணவர்களின் தெளிவான விளக்கமும் அறிவியல் புரிதலும் ஆசிரியர்களையும் பார்வையாளர்களையும் பெரிதும் மகிழ்ச்சியடையச் செய்தது.

**குழந்தைகள் தின விழா- நவம்பர் 14**

முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு குழந்தைகள் தின விழா பள்ளி வளாகத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. LKG மாணவ, மாணவிகள் நடனம், வேடிக்கை உடைகள் அணிந்து பென்சில், ரோபோ, போலீஸ், முருகன், பட்டாம்பூச்சி, ரத்ததானம், தாமஸ் ஆல்வா எடிசன், கட்டபொம்மன், வேலுநாச்சியார், ராமன்–சீதை, விமானி, ராணுவம், காவல்துறை, சிண்ட்ரெல்லா போன்ற வேடங்களில் உரையாற்றி அனைவரையும் கவர்ந்தனர். 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 2024–25 கல்வியாண்டில் நடைபெற்ற 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி பெற்றது.

12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு – 100% தேர்ச்சி (2024–25)

G. அம்சா ஸ்ரீ – 574/600 (கணக்கியல் 100/100) – முதல் இடம்

P. சஸ்வினா – 553/600 – இரண்டாம் இடம்

R. கீர்த்தனா – 524/600 – மூன்றாம் இடம்

V. கீர்த்தனா – 509/600

S. ஹரண்யா – 508/600

E. சுனில் திவாகர் – 503/600

2024–25 ஆம் ஆண்டு 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் பள்ளி **மாணவர்கள்** மாவட்ட அளவில் சிறப்பிடம் பிடித்தனர்.

**10ஆம் வகுப்பு - மாவட்ட அளவில் 5, 6, 7ஆம் இடங்கள்**

N. சம்யுக்தா – 493/500 (சமூக அறிவியல் 100/100)

K. காருண்யா ஸ்ரீதரன் – 492/500 (அறிவியல், வரலாறு 100/100)

A. ஆல்ட்ரிச் எபினேசர் – 491/500 (வரலாறு 100/100)

G. சஃப்யின்ஹில் – 482/500

A. சுஜித்ரா – 481/500 (அறிவியல் 100/100)

V. ஹரிஹரன் – சமூக அறிவியல் 100/100 மதிப்பெண்கள் பெற்று செங்கல்பட்டு மாவட்ட அளவில் 5, 6 மற்றும் 7 ஆம் இடங்களை மாணவர்கள் கைப்பற்றி, பள்ளிக்கும் கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

**தமிழக காவல்துறையுடன் இணைந்து மரியநிவாஸ் பள்ளி மாணவர்கள் போதைப் பொருள் விழிப்புணர்வு பேரணி**

தமிழக காவல்துறையின் தாம்பரம் காவல் ஆணையரக கண்காணிப்பின் கீழ் செயல்படும் பல்லாவரம் சரகத்திற்குட்பட்ட T-4 சங்கர் நகர் காவல் நிலையம் சார்பில் உதவி காவல் ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் இணைந்து, பொழிச்சலூர் மரியநிவாஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. இந்த பேரணியை பள்ளியின் தலைவர் J.ரங்கநாதன் தலைமையில், தாளாளர் R. பத்மினி, துணைத் தலைவர் K.R.ராகவேந்திரன், தலைமை ஆசிரியர் V.விஜயகுமாரி, உதவி தலைமை ஆசிரியர் C.தனசேகரன் ஆகியோர் முன்னிலையில் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். போதைப் பொருள் விழிப்புணர்வு பேரணியில் காவல்துறை அதிகாரிகள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் அணிவகுத்து பொழிச்சலூர் ஊராட்சி பிரதான சாலையில் ஊர்வலமாக சென்று,

**“போதைப் பொருள் வேண்டாம் - சிறந்த வாழ்க்கையைத் தேர்ந்தெடுங்கள்”,**

**“போதைப் பொருள் ஒழியட்டும் - வாழ்க்கைப் பாதை ஒளிரட்டும்”**

என முழக்கமிட்டு பொதுமக்கள் மற்றும் கடை வியாபாரிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மேலும் விதிகளை மீறி போதைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டால், பொதுமக்கள் 10581 மற்றும் 1933 என்ற தொலைபேசி எண்களில் புகார் அளிக்கலாம் என காவல்துறை சார்பில் அறிவுறுத்தப் பட்டது.

**கராத்தே, சிலம்பம், யோகாவில் பள்ளி மாணவ - மாணவிகள் உலக சாதனை!**

மரிய நிவாஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் உலக குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, குழந்தைகளுக்கு எதிரான போதை மருந்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிறப்பான நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், 200க்கும் மேற்பட்ட மாணவ–மாணவிகள் குழுக்களாக இணைந்து கண்களை மூடி யோகா, சிலம்பம், கராத்தே ஆகிய கலைகளை 14 நிமிடம் 11 நொடிகள் இடைவிடாமல் செய்து, பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தனர்.

இந்த அபூர்வ சாதனையின் மூலம் மாணவர்கள் NOVA Book of World Recordsஇல் இடம் பிடித்து பள்ளிக்கு பெருமை சேர்த்தனர். இந்த உலக சாதனை நிகழ்ச்சியில், NOVA Book of World Recordsஇன் தலைமை நிர்வாக ஆசிரியர் ராஜ்குமார் கலந்து கொண்டு, மாணவ–மாணவிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்ச்சியில் பள்ளியின் நிறுவனர் தலைவர் J.ரங்கநாதன் தாளாளர் R.பத்மினி, துணைத் தலைவர் K.R.ராகவேந்திரன், தலைமை ஆசிரியர் V.விஜயகுமாரி, உதவி தலைமை ஆசிரியர் C. தனசேகரன், கராத்தே–சிலம்பம் யோகா மாஸ்டர் வித்யா லட்சுமி, யோகா மாஸ்டர் சசிகலா, கராத்தே மாஸ்டர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மாணவர்களை பாராட்டினர். இந்த நிகழ்ச்சி, மாணவர்களிடையே ஒழுக்கம், உடல் வலிமை மற்றும் போதை மருந்து எதிர்ப்பு விழிப்புணர்வை வலுப்படுத்தும் முக்கிய முயற்சியாக அமைந்தது.

# மார்னிங் டைம்ஸ்

**ஆசிரியர்**

**N.அப்துல் சமது** B.Com.,

**தலைமை செய்தியாளர்**

**S.அப்துல் ரஹ்மான்**

**இணை ஆசிரியர்**

**A.பாத்திமா பிர்தெளஸ்** MBA., M.A., B.Ed.,

**கௌரவ ஆசிரியர்**

**விக்னேஷ்.J.**AMIE., BCA., DPM,

**துணை ஆசிரியர்கள்**

A.**காஜா மொய்தீன்** (அரசியல் பிரிவு)
K.N.**முஹம்மது ஆரிஃப்**
S.**முஹம்மது ரவூப்**

**உதவி ஆசிரியர்கள்**

A.**அப்துல் சமது**, M.**டெனிஸ்டன்**
B.**பூபதி**,

**உதவி ஆசிரியர்கள் (கல்விப்பிரிவு)**

M.L. **செய்யது அலி** M.Phil, B.Ed.,
M.**அப்துல் ரஹ்மான்** M.B.A.,

**மண்டல செய்தியாளர்**

K.N.**அப்துல் ரஜாக்**

**மாவட்ட செய்தியாளர்கள்**

K.H.**ரியாஸ் அலி அஹமது** (சென்னை மாவட்டம்)
S.**கரீம்** (திருவள்ளூர் மாவட்டம்)
M.G.**தமீம் அன்சாரி** (சென்னை வடக்கு)
J.**ரசூல் மொய்தீன்** (சென்னை தெற்கு)
M.**பிரேம்குமார்** (செங்கல்பட்டு மாவட்டம்)
M.**முஹம்மது யூசப் சைபுல்லாஹ்** (சென்னை தெற்கு)
R.**நாகராஜன்** (காஞ்சிபுரம்)

**செய்தியாளர்கள்**

K.N. **நிஜாமுதீன்** (சேப்பாக்கம் தொகுதி)
A.**அபிப் ரஹ்மான்**(பல்லாவரம் தொகுதி)
S.**முகம்மது ஷேக்** (தாம்பரம் தொகுதி)
K.**முகமது சுலைமான்** (மாங்காடு)
G.**ஜீலானி** (பெரம்பூர்)
K.**சரவணன்** (கொடுங்கையூர்)
K.**பிரபு** (M.K.B நகர்)
C.**முகமது சுலைமான்** M.A.,

**சட்ட ஆலோசகர்கள்**

S.K.**தமீம் அன்சாரி**B.A.B.L., (திருநெல்வேலி)
K.**முகம்மது பிலால் அலி** B.Tech., MBA(HRM)., LLB(Hons)., ML., PGD(IPR)., LLI
K.**இளங்கோவன்** (குன்றத்தூர்)
M.**சீனி அபுபக்கர் சித்திக்** M.A.B.L., (சென்னை)
R.**உதயணன்** B.A.B.L., (செங்கல்பட்டு)
A.**கார்த்திக்** B.A.B.L., (காஞ்சிபுரம்)
C.**சசிகுமார்** B.A.B.L., (மதுரை உயர் நீதிமன்றம்)
E.**கவியரசன்** B.A.B.L., (திருச்சி)

**வடிவமைப்பு**

SIVAN CREATION

## ஆன்மீக சிந்தனை



நோன்பு வைத்திருக்கும் ஒரு நபர் ஸஹரிலிருந்து இப்தார் வரைக்கும், வீட்டிலே யாரும் இல்லாத போது, அவர் தண்ணீர் குடிப்பாரா? குடிக்க மாட்டார். அவர் உணவு உண்பாரா? உண்ண மாட்டார். தவறான காரியத்தில் ஈடுபடுவாரா? ஈடுபடமாட்டார். காரணம் யாரும் என்னை பார்க்கவில்லை என்றாலும் அல்லாஹ் என்னை பார்த்து கொண்டு இருக்கிறான் என்ற எண்ணம். ஆக நோன்பு காலத்தில் ஸஹரிலிருந்து இப்தார் வரைக்கும் மட்டும் தான் அல்லாஹ் பார்த்து கொண்டு இருக்கிறானா? இப்தாரிலிருந்து ஸஹர் வரை அவன் என்ன ஓய்வெடுக்கிறானா?

அவனுக்கு தான் சின்ன தூக்கம், பெரிய தூக்கம் இல்லை என்று திருமறையில் சொல்லிவிட்டானே. அந்த அல்லாஹ் எப்பொழுதும் பார்த்து கொண்டு தான் இருக்கிறான். ஸஹரிலிருந்து இப்தார் வரைக்கும் மட்டுமல்ல அதற்குப் பிறகும் அல்லாஹ் என்னை பார்த்துக் கொண்டிருக்கிறான். ரமலானில் மாதத்தில் மட்டுமல்ல ஏனைய எல்லா மாதத்திலும் அல்லாஹ் என்னை பார்க்கின்றான். எல்லா வருஷமும், எல்லா மாதமும், எல்லா வாரமும், எல்லா நாளும், எல்லா மணி நேரமும், எல்லா நிமிடமும், எல்லா நொடிப்பொழுதும் அல்லாஹ் என்னை பார்த்துக் கொண்டிருக்கிறான்... அப்படி அல்லாஹ் என்னை பார்த்துக் கொண்டிருக்கும் போது, நான் எப்படி பாவம் செய்வேன்? இந்த உன்னதமான தக்வா இந்த நோன்பிலே கிடைக்கிறது!!”

## ஆசிரியர் கருத்து

# இந்த காலகட்டத்தில் பெற்றோர்களின் அவலநிலை
# பிள்ளைகளே, பெற்றோர்களை பார்த்துக் கொள்ளுங்கள்

இன்றைய நவீன வாழ்க்கை முறை மனிதனின் வசதிகளை அதிகரித்திருக்கலாம்; ஆனால் அதே நேரத்தில் மனித உறவுகளின் பாசத்தையும், நெருக்கத்தையும் மெல்ல மெல்ல குறைத்துக்கொண்டு வருகிறது. குறிப்பாக, பெற்றோர் பிள்ளைகள் என்ற உறவு, காலத்தின் வேகத்தில் அதிகம் பாதிக்கப்படும் ஒன்றாக மாறியுள்ளது. ஒருகாலத்தில் குடும்பத்தின் மையமாக விளங்கிய பெற்றோர்கள், இன்று பல இடங்களில் தனிமையும் அலட்சியமும் நிறைந்த வாழ்க்கை வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பிள்ளைகள் சிறுவயதில் இருக்கும் காலத்தில், அவர்களின் பசி, கல்வி, உடல் நலம், எதிர்காலம் என அனைத்தையும் சுமந்தவர்கள் பெற்றோர்களே. தங்களது கனவுகளை ஒதுக்கி வைத்து, பிள்ளைகளின் வாழ்க்கையை செழிப்பாக்கியவர்கள். ஆனால் இன்று அந்த பிள்ளைகள் வளர்ந்து, வேலை, திருமணம், வெளிநாட்டு வாழ்க்கை எனப் பிஸியாகி விட்டபின், பெற்றோர்கள் நினைவில் கூட இல்லாதவர்களாக மாறிவிடும் அவலம் பல குடும்பங்களில் காணப்படுகிறது.

மூப்பு என்பது உடல் சோர்வையும், மன அழுத்தத்தையும் உடன் கொண்டுவரும் காலம். இந்தக் காலத்தில் பெற்றோர்களுக்கு அதிகமாக தேவைப்படுவது பணமோ வசதியோ அல்ல; அன்பான பேச்சு, அக்கறையான கவனம், பிள்ளைகளின் அருகாமை தான். ஆனால் “நேரமில்லை” என்ற ஒரே காரணம், பல பெற்றோர்களின் மனதை ஆழமாகப் புண்படுத்தி வருகிறது. சில பெற்றோர்கள் முதியோர் இல்லங்களில் தங்க வைக்கப்படுகிறார்கள். சிலர் தங்கள் சொந்த வீட்டிலேயே இருந்தும், அன்பில்லா சூழலில் தனிமையாக வாழ்கிறார்கள். இது ஒரு குடும்பப் பிரச்சனை மட்டுமல்ல; முழு சமூகமும் கவனிக்க வேண்டிய மனிதநேயப் பிரச்சனை.

நமது பண்பாடு, “பெற்றோரைப் போற்றுவது கடமை” என்று சொல்லிக் கற்றுக் கொடுத்தது. ஆனால் இன்றைய சூழலில், அந்தக் கடமை சுமையாகப் பார்க்கப்படும் மனநிலை உருவாகி வருவது வேதனை அளிக்கிறது. பெற்றோர் நம்மை சுமையாகக் கருதவில்லை; அவர்கள் தங்கள் வாழ்நாளையே பிள்ளைகளுக்காக அர்ப்பணித்தவர்கள் என்பதை மறக்கக் கூடாது. பிள்ளைகளே, ஒரு நாள் நீங்கள் கூட பெற்றோர்களாக மாறுவீர்கள். அப்போது உங்கள் பிள்ளைகள் உங்களை எப்படி நடத்த வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ, அதே விதத்தில் இன்று உங்கள் பெற்றோர்களை நடத்துங்கள். இன்று நீங்கள் காட்டும் அக்கறை தான், நாளை உங்களுக்கு கிடைக்கும் பதில்.

பெற்றோர்களை கவனிப்பது ஒரு கடமை அல்ல; அது ஒரு பெருமை. அவர்களின் கைகளைப் பிடித்து நடக்கச் செய்யுங்கள். அவர்களின் வார்த்தைகளைக் கவனமாகக் கேளுங்கள். அவர்கள் உயிருடன் இருக்கும் வரை, அவர்களுக்கு அன்பையும் பாதுகாப்பையும் வழங்குங்கள்.

ஏனெனில், பெற்றோர் இருக்கும்போது அவர்களின் மதிப்பு தெரியாது; இல்லாதபோது தான் அவர்களின் வெற்றிடம் வலியுடன் உணரப்படும். பெற்றோர்களைப் பார்த்துக் கொள்ளுங்கள். அவர்களின் உடல்நலத்தையும், மனநலத்தையும் கவனியுங்கள். அவர்களுடன் பேசுங்கள், சிரியுங்கள், அவர்களின் ஆசைகளை கேளுங்கள். இன்றுள்ள இந்த வாய்ப்பு, நாளை இல்லாமல் போகலாம். பெற்றோரின் புன்னகை பிள்ளைகளுக்கான ஆசீர்வாதம். அந்த ஆசீர்வாதம் உங்களிடம் இருந்து விலகி விடாதிருக்க, இன்றே அவர்களை அணைத்துக் கொள்ளுங்கள். பிள்ளைகளே, நினைவில் கொள்ளுங்கள் நீங்கள் இன்று நிம்மதியாக வாழ்கிறீர்கள் என்றால், அதன் பின்னால் பெற்றோரின் வியர்வையும் கண்ணீரும் இருக்கிறது. அவர்கள் உங்கள் வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் தங்களையே மறந்து உங்களுக்காக வாழ்ந்தார்கள். இப்போது, அவர்களின் வாழ்க்கையின் இறுதிக் காலத்தில், நீங்கள் அவர்களுக்காக சில நிமிடங்களையாவது ஒதுக்க வேண்டியது கடமை.



இவன்
N.அப்துல் சமது
ஆசிரியர், மார்னிங் டைம்ஸ்

## பொதுமக்களுக்கு விழிப்புணர்வு



**டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் தடுக்கும் வழிமுறைகள்**

1. பப்பாளி இலையின் சாறு டெங்கு நோயாளிகளுக்கு நன்மை பயக்கும்..
2.குடிநீரை நன்கு காய்ச்சி பருகவும்.
3.தண்ணீரை தேங்க விடாமல், கொசு உருவாகாமல் தடுப்பதற்கு சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளவும்.



## சத்யபாமா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின்

# கடல் ஆராய்ச்சி மையத்தில் ஓசியானா காட்சியகம்



சத்யபாமா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் கடல் ஆராய்ச்சி மையத்தில் உள்ள ஓசியானா (OCEANA) காட்சியகம், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களிடையே கடல் சார்ந்த கல்வி மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட சிறு அருங்காட்சியகமா உள்ளது. தற்போதைய சேகரிப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட கடல் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் உள்ளடக்கிய முக்கிய கடல்வாழ் உயிரினங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் 66 வகையான மீன்கள் (Osteichthyes) உள்ளன. அவை டிமெர்சல் (கரையோர வாழ்கிற), பெலாஜிக் (கடற்பரப்பில் வாழ்கிற), மற்றும் ரீஃப் (பவளப்பாறையில் வாழ்கிற) தொடர்பான வகைகளை உள்ளடக்கியது. இவைகள் மாணவர்கள் மீன் உருவவியல், சூழலியல் மற்றும் பரிணாம பண்புகளை ஆய்வு செய்ய உதவுகின்றன.

மேலும் குருத்தெலும்பு மீன்களான (Condrichthyes), சுறா மற்றும் திருக்கை வகைகளும் இடம் பெற்றுள்ளன. இந்த காட்சிப்படுத்துதல் கடல்சார் சூழலியல், சமநிலை பராமரிப்பதில் உச்ச வேட்டையாடும் விலங்குகளின் முக்கியத்துவம் மற்றும் உலகளாவிய சுறாக்களின் பாதுகாப்பு தேவைகளை வலியுறுத்தும் வகையில் உள்ளது. இந்த ஓசியானா காட்சியகம், சத்யபாமா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் வேந்தர் முனைவர் மரியாஜீனா ஜான்சன் அவர்கள் முன்னிலையில், இந்திய அரசின் புவி அறிவியல் அமைச்சகத்தின் செயலாளர் முனைவர் எம். ரவிச்சந்திரன் அவர்கள் அக்டோபர் 13, 2025 அன்று திறந்து வைத்தார்.

# அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளையின் (ANRF)

# கடற்புல் தட்பவெப்ப நிலைத்தன்மை கருத்தரங்கம்






அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளையின் (ANRF) நிதியுதவியுடன் சர்வதேச கடற்புல் தட்பவெப்ப நிலைத்தன்மை கருத்தரங்கின் (International Seagrass-Climate Resilience Conference 2025) 3, 2025 அன்று சத்யபாமா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தில் உள்ள கடல் ஆராய்ச்சி மையத்தில் சிறப்பாக நடைபெற்றது. சத்யபாமா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் இயக்குநர் (ஆராய்ச்சி) மற்றும் முன்னாள் துணைவேந்தர் முனைவர் பா. ஷீலா ராணி, அவர்கள் விழாவில் கலந்து கொண்டு வரவேற்புரை வழங்கினார்.

புதுதில்லியில் உள்ள அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளையின் (ANRF) விஞ்ஞானி முனைவர் தி. தங்கராட்ஜு மற்றும் செட்டிநாடு ஆராய்ச்சி மற்றும் கல்வி அகாடமியின் ஆலோசகரும் முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் முனைவர் த. பாலசுப்ரமணியன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்புரை நல்கினர். மேலும், நார்வே கடல் ஆராய்ச்சி நிறுவனத்தின் (IMR, Norway) மூத்த ஆராய்ச்சியாளர் முனைவர் லீன் புல்மோர்டென்சன் மற்றும் கொச்சியில் உள்ள நான்சென் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மையத்தின் முதன்மை விஞ்ஞானி மற்றும் நிர்வாக இயக்குனர் முனைவர் கே. அஜித் ஜோசப் ஆகியோர் கலந்து கொண்டு கடற்புல் தட்பவெப்ப நிலைத்தன்மை தொடர்பான உரைகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியின் அறிவியல் ஆழத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் கொச்சியில் உள்ள என். இ. ஆர்.சி.ஐ.யின் (NERCI) முதன்மை விஞ்ஞானியும் துணை இயக்குநருமான முனைவர் நந்தினி மேனன், அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் கடல்சார் உயிரியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் ஐ.சரவணகுமார் மற்றும் கொச்சியில் உள்ள என்.இ.ஆர்.சி. ஐ. யின் (NERCI) விஞ்ஞானி முனைவர் ஆர். இரணித் உள்ளிட்ட நிபுணர்கள் கலந்து கொண்டு உரைகளை வழங்கினர். கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை பின்னடைவு மற்றும் நிலையான நீலப் பொருளாதார மேம்பாடு ஆகியவற்றில் கூட்டு ஆராய்ச்சி முயற்சிகளை முன்னெடுக்கும் பொருட்டு இந்நிகழ்ச்சி முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இந்நிகழ்ச்சியை தங்களின் விலைமதிப்பற்ற பங்களிப்பின் மூலம் வெற்றியடையச் செய்த சிறப்பு விருந்தினர்கள், பேச்சாளர்கள், பங்கேற்பாளர்கள் மற்றும் கூட்டுப் பங்குதாரர்கள் ஆகிய அனைவருக்கும் சத்யபாமா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தில் உள்ள கடல் ஆராய்ச்சி மையம் தனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

# பல்லுயிர் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளின் ஆசிரியர் தேர்வு

**டாக்டர் இன்பகந்தன் தினகரசாமி**





சத்யபாமா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் பெருங்கடல் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியரும் (ஆராய்ச்சி) தலைவருமான Dr. இன்பகந்தன் தினகரசாமி, அரசுகளுக்கிடையேயான பல்லுயிர் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகள் குறித்த அறிவியல்கொள்கை தளத்தின் (IPBES) முதன்மை முயற்சியான இரண்டாவது உலகளாவிய பல்லுயிர் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளின் மதிப்பீட்டிற்கான முன்னணி ஆசிரியராகத் (Lead Author) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.


இந்த மதிப்புமிக்க நியமனம், பல்லுயிர் பன்முகத்தன்மையின் நிலை மற்றும் போக்குகள் குறித்த அத்தியாயத்தைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சர்வதேச நிபுணர்களின் குழுவில் டாக்டர் இன்பகந்தன் தினகரசாமியை இடம்பெறச் செய்கிறது. 2028 ஆம் ஆண்டில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ள இந்த மதிப்பீடு, 2019 IPBES உலகளாவிய மதிப்பீட்டின் மைல்கல்லில் இருந்து உருவாக்கப்பட்ட அறிவியல் அறிவை மதிப்பாய்வு செய்து, இயற்கையுடன் நிலைத்தன்மை மற்றும் நல்லிணக்கத்தை நோக்கிய உலகளாவிய முன்னேற்றத்தை மதிப்பிடும். இந்தப் பாத்திரத்தின் ஒரு பகுதியாக, பிரான்சின் பாரிஸில் (Paris, France) உள்ள யுனெஸ்கோ (UNESCO) தலைமையகத்தில் நவம்பர் 2025 இல் நடைபெறும் முதல் ஆசிரியர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள Dr.இன்பகந்தன் தினகரசாமி அழைக்கப் பட்டுள்ளார். உலகளாவிய அறிவியல் செயல்முறைக்கு அவர் அளித்த பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் IPBES பயண ஆதரவை வழங்கும்.

Dr.இன்பகந்தன் தினகரசாமி, "பல்லுயிர் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகள் குறித்த உலகின் மிக முக்கியமான மதிப்பீடுகளில் ஒன்றிற்கு பங்களிப்பது ஒரு மரியாதை" என்று கூறி, இந்த உலகளாவிய முயற்சியில் சத்தியபாமா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தை பிரதிநிதித்து வப்படுத்துவது "மக்கள் மற்றும் இயற்கையை ஆதரிக்கும் அறிவியல்கொள்கை உரையாடல்களை வலுப்படுத்த ஒரு அர்த்தமுள்ள வாய்ப்பு" என்று அவர் மேலும் கூறினார். 2012 இல் நிறுவப்பட்ட IPBES, 147 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஒரு சுயாதீனமான அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும். பெரும்பாலும் "பல்லுயிர் பெருக்கத்திற்கான IPCC என்று விவரிக்கப்படும் IPBES, பாதுகாப்பு, நிலையான வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் மீள்தன்மை குறித்த கொள்கை முடிவுகளை வழிநடத்த அதிகாரப்பூர்வ அறிவியல் மதிப்பீடுகளை வழங்குகிறது.

Dr.இன்பகந்தன் தினகரசாமி தேர்வு கடல் சூழலியல், கடலோர பல்லுயிர் ஆராய்ச்சி, உயிரி மாசுபாடு மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த பாதுகாப்பு அணுகுமுறைகளில் அவர் அளித்த விரிவான பங்களிப்பு களை பிரதிபலிக்கிறது. கடல் ஆராய்ச்சி மையத்தில் அவரது பணி கடல் அமைப்புகள் பற்றிய மேம்பட்ட புரிதலைக் கொண்டுள்ளது மற்றும் கடல் அறிவியலில் தேசிய மற்றும் சர்வதேச முயற்சிகளை ஆதரிக்கிறது. இந்த அங்கீகாரம் Dr.இன்பகந்தன் தினகரசாமி மற்றும் சத்யபாமா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் ஆகிய இருவருக்கும் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையைக் குறிக்கிறது. இது உலகளாவிய பல்லுயிர் நிர்வாகத்தில் இந்தியாவின் வளர்ந்து வரும் பங்கை எடுத்துக்காட்டுகிறது.

# விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கியமான உணவின் முக்கியத்துவம்

மனித வாழ்க்கையில் விளையாட்டும் உடற்பயிற்சியும் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றன. இவை உடல் நலத்தையும் மன நலத்தையும் மேம்படுத்துவதில் பெரும் உதவியாக இருக்கின்றன. இன்றைய இயந்திரமயமான வாழ்க்கையில் உடற்பயிற்சி இல்லாமல் இருப்பதும், சத்தான உணவுகளை தவிர்ப்பதும் பல நோய்களுக்கு காரணமாகிறது. அதனால் தினசரி வாழ்க்கையில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிக்கு அவசியம் இடம் கொடுக்க வேண்டும். உடற்பயிற்சி உடலை உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவுகிறது. இதனால் இதய நோய்கள், நீரிழிவு, உடல் பருமன் போன்ற நோய்கள் குறைகின்றன. எலும்புகளும் தசைகளும் வலுப்பெறுகின்றன. உடலில் சுறுசுறுப்பும் சக்தியும் அதிகரிக்கிறது.



விளையாட்டுகள் மன நலத்தையும் மேம்படுத்துகின்றன. மன அழுத்தம், கவலை, மனச்சோர்வு ஆகியவற்றை குறைக்க விளையாட்டு உதவுகிறது. குழு விளையாட்டுகள் ஒற்றுமை, ஒழுக்கம், பொறுமை, தலைமைத் திறன் போன்ற நல்ல பண்புகளை வளர்க்கின்றன. மாணவர்களுக்கு கவனம், நினைவாற்றல் மற்றும் தன்னம்பிக்கை அதிகரிக்கிறது. மேலும், விளையாட்டு நேரத்தை சரியாக பயன்படுத்த கற்றுக்கொடுக்கிறது. தீய பழக்கங்களிலிருந்து விலகி நல்ல வாழ்க்கை முறையை உருவாக்க உதவுகிறது. ஆரோக்கியமான உடலில்தான் ஆரோக்கியமான மனம் இருக்கும் என்பதால், விளையாட்டும் உடற்பயிற்சியும் அனைவருக்கும் அவசியமானவை.

ஆரோக்கியமான உணவு உடலுக்கு தேவையான ஊட்டச்சத்துகளை வழங்குகிறது. காய்கறிகள், பழங்கள், தானியங்கள், பருப்பு வகைகள், பால் மற்றும் புரதச்சத்துகள் நிறைந்த உணவுகளை உட்கொள்வது உடல் வளர்ச்சிக்கு உதவுகிறது. எண்ணெய், சர்க்கரை மற்றும் ஜங்க் உணவுகளை குறைப்பது நல்ல ஆரோக்கியத்திற்கு அவசியம். சத்தான உணவு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடலை பலப்படுத்துகிறது.

விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கியமான உணவு இணைந்து செயல்படும் போது உடலும் மனமும் ஆரோக்கியமாக இருக்கும். மாணவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் என அனைவரும் இவற்றை தினசரி வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும். ஆகையால், தினமும் குறைந்தது சில நேரமாவது விளையாட்டு அல்லது உடற்பயிற்சிக்கு ஒதுக்கி, சத்தான உணவுகளை தேர்வு செய்து உண்ணவும் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ முயற்சிப்போம்.

# மக்களே உஷார்! ஆன்லைன் மோசடி உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்




இன்றைய டிஜிட்டல் காலத்தில் ஆன்லைன் மோசடிகள் (Cyber Fraud) அதிகரித்து வருகின்றன. சிறிய கவனக்குறைவாலும் உங்கள் பணம், தனிப்பட்ட தகவல், வங்கி விவரங்கள் அனைத்தையும் இழக்கும் அபாயம் உள்ளது. அதனால் கீழ்கண்ட விஷயங்களை அனைவரும் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டும்.

**பொதுவான ஆன்லைன் மோசடிகள்**

1. **OTP / Link மோசடி**

•"Bank / KYC Update" என்ற பெயரில் Link அனுப்புவர் •OTP கேட்டால் ஒருபோதும் கொடுக்காதீர்கள் வங்கி அதிகாரிகள் OTP கேட்கவே மாட்டார்கள்

2. **Fake Call (Police / Bank / Government)** •"உங்கள் கணக்கு முடங்கும்" •"Lottery / Prize கிடைத்துள்ளது" பயமுறுத்தி தகவல் பெற முயற்சி

3. **Online Job / Part-time Scam**

•"வீட்டிலிருந்து வேலை – அதிக சம்பளம்" •Registration Fee / Processing Fee கேட்பார்கள் உண்மையான வேலைக்கு முன்பணம் கிடையாது

4. **Online Shopping Fraud**

•குறைந்த விலையில் பொருட்கள் •போலி Website / Fake Instagram Page Cash on Delivery இல்லையெனில் கவனம்

5. **UPI / QR Code Scam**

•"பணம் பெற QR Scan செய்யுங்கள்" என்று சொல்லி •Scan செய்தால் பணம் போய்விடும் பணம் பெற Scan தேவையில்லை உங்களை பாதுகாத்துக் கொள்ளும் வழிகள்

OTP, ATM PIN, CVV – யாரிடமும் பகிர வேண்டாம்

சந்தேகமான Linkகளை Click செய்யாதீர்கள் Unknown App-களை Install செய்யாதீர்கள் வங்கி App / Website – Official தளமா என சரிபார்க்கவும் சமூக வலைதளங்களில் தனிப்பட்ட விவரங்கள் பகிர வேண்டாம் வயதானவர்கள் - மாணவர்களுக்கு இதைப் பற்றி சொல்லுங்கள் மோசடி நடந்தால் உடனடி நடவடிக்கை 1930 – National Cyber Crime Helpline cybercrime.gov.in – ஆன்லைன் புகார் தாமதிக்காமல் புகார் கொடுத்தால் பணம் திரும்ப பெற வாய்ப்பு அதிகம் நினைவில் கொள்ளுங்கள் "அவசரம் + பயம் + ஆசை" இதுதான் மோசடிக்காரர்களின் ஆயுதம் அறிவே பாதுகாப்பு. நீங்கள் மட்டும் அல்ல – உங்கள் குடும்பம், நண்பர்கள், பொது மக்கள் அனைவருக்கும் இந்த தகவலை பகிருங்கள். மக்களே உஷார் – ஆன்லைன் மோசடியை ஒழிப்போம்!



# 6வது தேசிய விருது 2024 சிறந்த கிராம பஞ்சாயத்து



பலாபுரம், திருவள்ளூர் மாவட்டம் அரசு அறிக்கை பலாபுரம் பஞ்சாயத்து, திருவள்ளூர் மாவட்டம் 6வது தேசிய நீர் விருது 2024 (Best Village Panchayat) தேதி: 18 ஜூன் 2025 தயாரிப்பு: ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை / மாவட்ட ஆட்சி, திருவள்ளூர்

**1. மேலோட்டப் பார்வை**

திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பெட் ஒன்றியத்தில் உள்ள பலாபுரம் கிராம பஞ்சாயத்து, சமுதாய அடிப்படை யிலான நீர் பாதுகாப்பு, வன வளர்ச்சி மற்றும் நிலைத்த வள மேலாண்மை போன்ற சிறப்பு சாதனைகளுக்காக 6வது தேசிய நீர்வருட விருது 2024 பெற்றுள்ளது. இந்த விருது, பாரம்பரிய அறிவு, நவீன பொறியியல் மற்றும் மக்கள் பங்களிப்பை ஒருங்கிணைத்து நீண்டகால நீர் பாதுகாப்பை உறுதி செய்த பலாபுரத்தின் மாற்றத்திற்கான முயற்சிகளை பாராட்டுகிறது.

**2. நீர்வளம் மீட்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்**

பலாபுரம் பஞ்சாயத்து, அறிவியல் திட்டமிடல் மற்றும் மக்கள் பங்கேற்புடன் பெரிய அளவிலான நீர்வளம் மீட்பு முயற்சிகளை மேற்கொண்டது. மொத்தம் 60 நீர்நிலைகள் புதுப்பிக்கப்பட்டது, அதிலிருந்து: 20 சோலார் அணைகள் (Check Dams) - மேற்பரப்பு ஓட்டத்தைக் கட்டுப்படுத்துதல், நிலச்சரிவு தடுக்குதல், நிலத்தடி நீர் நிரப்புதல். 09 ஊடுருவல் குளங்கள் (Percolation Ponds) - மழைநீரை தக்க வைத்து கிணறு மற்றும் புல்நில ஈரத்தன்மையை அதிகரித்தல். 18 பண்ணை குளங்கள் (Farm Ponds) - சிறு – ஓரங்கட்டுப் பண்ணையாளர்களுக்கு முக்கிய மழைநீர் ஆதாரம். 6 ஊராணிகள் + 6 பாரம்பரிய குளங்கள் தூர்வாரி சீரமைத்தல்.

1 சிறிய பாசனத் தடுப்பு (Minor Irrigation Tank) - பாசன உற்பத்தியை உயர்த்தல். இதனால் 30–40% நிலத்தடி நீர் உயர்வு (2022–25) ஏற்பட்டு வறட்சியை எதிர்கொள்ளும் திறன் அதிகரித்தது.

**3. புதுமையான நீர்ச்சுரந்தல் நடைமுறைகள்**

மொத்தம் 51 புதிய நீர்சுரந்தல் அமைப்புகள் உருவாக்கப்பட்டன: 285 தனிநபர் சோக் பிட்டுகள் வீட்டு கழிவுநீர் ஊடுருவலுக்காக. 43 கூரை மழைநீர் சேகரிப்பு அமைப்புகள். 7 பொது கட்டிட RWH யூனிட்டுகள் பள்ளிகள் மற்றும் அலுவலகங்களில். 2 ரீசார்ஜ் ஷாஃப்ட் + 2 ரீசார்ஜ் பிட்டுகள். இவை அனைத்தும் நீர்நிலத்தில் வருடமுழுவதும் நல்ல நீர்புலனைக் கொண்டு வந்துள்ளன.

**4. நிலைத்த வேளாண்மை மற்றும் நீர் திறன்**

பலாபுரத்தில் நீர் திறன் கொண்ட வேளாண்மை முறைகள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது:

அதிக நீரைத் தேவையாக்கும் பயிர்களில் இருந்து வரகு, நிலக்கடலை, உளுந்து, தோட்டக்கலை பயிர்கள் போன்ற பயிர்களுக்கு மாற்றம்.

6 ஹெக்டர் நிலத்தில் டிரிப் பாசனம்.

பயிரிட்ட நிலப்பரப்பு 140.59 ha 145.59 ha ஆக உயர்வு.

இருவேளை பயிரிடல் 29.41 ha ஆக உயர்வு.

பயிர் தீவிரம் 0.98 1.19.

இதனால் உற்பத்தி மற்றும் நீர் பயன்பாடு திறன் அதிகரித்தது.

**5. பெரிய அளவிலான மரக்கன்று நடவு - சூழலியல் மறுசீரமைப்பு**

மொத்தம் 24,500 மரக்கன்றுகள் நட்டம் 2,500



**ஒன்றிய ஜல்சக்தி அமைச்சகத்தின் 6வது தேசிய விழாவில் திருவள்ளூர் மாவட்டம் பாலாபுரம் ஊராட்சி நீர் மேலாண்மையில் சிறந்த ஊராட்சி பிரிவில் 3ஆம் இடத்திற்கான விருதை வென்றது. இந்த விருதினை ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சர், திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் பிரதாப் அவர்களிடம் வழங்கினார்.**

நீர்உறிஞ்சும் குழிகள் மலைச்சரிவுகளில் 750 தெரு மரங்கள் கிராம சூழலை மேம்படுத்த 126 மர இனங்கள் உயிரினப் பல்வகைமைக்காக இந்த முயற்சி 2°C-4°C வெப்பநிலை குறைவு, அதிக நிலத்தடி நீர் ஊடுருவல், அதிக கார்பன் உறிஞ்சல் போன்ற பயன்களை வழங்குகிறது.

**6. புதிய நீர்நிலைகள் உருவாக்கம்**

மொத்தம் 4 புதிய குளங்கள் உருவாக்கப் பட்டன. இவை சமுதாயம் வழிநடத்தும் பராமரிப்பு குழுவின் மூலம் பராமரிக்கப் படுகின்றன.

**7. மக்கள் விழிப்புணர்வு - நீர் பட்ஜெட்டிங்**

பட்டறைகள், மக்கள் சந்திப்புகள், புனைவு ஊடகங்கள் விவசாயிகள் மற்றும் இளைஞர் களுக்கு நீர் பட்ஜெட்டிங் பயிற்சி தரவின் அடிப்படையில் பயிர் திட்டமிடல் – நீர்பங்கீடு இதனால் மக்கள் பயனாளர்களில் இருந்து நீர் வள பாதுகாப்பின் பொறுப்பாளர்களாக மாறினர்.

**8. திட - திரவக் கழிவுநீர் மேலாண்மை**

**100% குப்பை மூலத்தில் பிரித்தல்**

உயிர்க்கழிவிலிருந்து உரம் தயாரித்தல் 285 சோக் பிட்டுகள் மூலம் கழிவுநீர் மேலாண்மை திறந்த குப்பை வீச்சு முற்றிலும் நீக்கம்

**9. ஜல் வாழ்க்க மிஷன் 100% குடிநீர் குழாய்ச் சேர்ப்பு**

4,185 மீட்டர் குழாய் இணைப்பு ஒவ்வொரு வீட்டுக்கும் சுத்தமான குடிநீர் குழாய் ஆரோக்கியம், சுகாதாரம் மேம்பாடு; பெண்கள் – குழந்தைகளின் சுமை குறைவு

**10. மக்கள் வழிநடத்தும் நீர் ஆட்சி**

சுயஉதவி குழுக்கள், இளைஞர்கள், விவசாயிகள் நீர்நிலைகள் – சோக் பிட்டுகளை பராமரிப்பு கிராம சபை பதிவுகளில் தெளிவான ஆவணப்படுத்தல் பெண்களின் பங்கேற்பு அதிகரிப்பு பாலின சமத்துவம், பொறுப்பு ஆட்சி

**11. இந்தியா முழுவதும் பரவக்கூடிய மாதிரி**

பலாபுரம், பாரம்பரியம் + அறிவியல் + மக்கள் பங்களிப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்த நிலைத்த நீர் மேலாண்மை மாதிரி ஆக திகழ்கிறது. நீர் பாதுகாப்பு சூழலியல் மீட்பு கிராம வாழ்வாதார மேம்பாடு இந்த மாதிரி இந்தியாவின் பிற கிராமங்களிலும் பயன்படுத்தக்கூடிய சிறந்த முன்னுதாரணமாகும்.






# அரசு ஸ்டான்லி மருத்துவமனை சிறப்புகள்

அரசு ஸ்டான்லி மருத்துவமனை 1782 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு இன்றுவரை சிறப்பாக செயல்பட்டு வரும் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. இந்த மருத்துவமனை 1938 ஆம் ஆண்டு முதல் நவீன மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**பொதுமருத்துவத்துறை:** பொது மருத்துவத்துறையில் உயர்இரத்த அழுத்தம் கிளினிக், நாளமில்லா சுரப்பி கிளினிக், முதியோர் கிளினிக் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. சமீபத்தில் இத்துறை நடத்திய சர்வதேச மாநாட்டில் ராயல் காலேஜ் ஆலோசகர்கள் பங்கேற்றனர்.

**நீரிழிவு நோய் துறை:** நீரிழிவு நோய் துறையானது 1948 முதல் செயல்பட்டு வருகின்றது. MHC மற்றும் MTM சேவைகளுக்கு ஆதரவாக துணைபுரிகின்றன.

**குழந்தைகள் நலப்பிரிவுத் துறை:** குழந்தைகள் நலப்பிரிவுத் துறையானது ஊட்டச்சத்து கிளினிக் மற்றும் DEIC சேவைகளை வழங்கிவருகின்றன.

**தோல் நோய் பிரிவு:** தோல் நோய் மருத்துவம், வெனரியாலஜி மற்றும் தொழுநோய் துறையானது CMCHIS மூலம் சொரியாசிஸ் நோயாளிகளுக்கு தேவையான உயிரியல் சிகிச்சை மருந்துகள் வழங்கப்படுகின்றன. காஸ்மாடோலோஜி துறை மற்றும் தோல் வங்கியானது பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைத்துறை நிபுனர்களுக்கு தேவையான உதவியை வழங்குகின்றன.

**இரைப்பை குடல் அறுவைச்சிகிச்சைத் துறை:** இரைப்பை குடல் அறுவைசிகிச்சைத் துறையானது 1984 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. மேலும் NVHP மற்றும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை திட்டங்களுடன் எண்டோஸ்கோபி மற்றும் அல்ட்ராசவுண்ட மற்றும் EUS சேவைகளையும் வழங்குகின்றன.

**இருதயவியல் துறை:** இருதயவியல் துறையனது ICUவைக் கொண்டடுள்ளது மற்றும் முதன்மை PTCA செயல்முறைகளை செயல்படுகிறது.

**மனநலத்துறை:** மனநலத்துறையானது ECRC சேவைகள் மற்றும் போதை நீக்க மையங்களைக் கொண்டுள்ளது. மேலும் மனம் திட்டங்களில் பங்கேற்கிறது.

**சிறுநீரகவியல் துறை:** சிறுநீரகவியல் துறை 1986இல் சிறுநீரக மாற்று அறுவைச்சிகிச்சையைத் தொடங்கி இன்றுவரை 1014க்கும் மேற்பட்ட மாற்று அறுவை சிகிச்சைகளைச் சிறப்பாக செய்து வருகின்றது.

**புற்றுநோயியல் துறை:** புற்றுநோயியல் துறையானது ஸ்கிரீனிங் திட்டத்தை நடத்தி வருகின்றது மற்றும் கட்டிகள் சார்ந்த பதிவேட்டை பராமரித்து வருகின்றன.

**நரம்பியியல் துறை:** நரம்பியல் துறையானது த்ரோம்போலிசிஸ் ம்றும் த்ரோம்பெக்டமி சேவைகளை வழங்கிவருகிறது. மேலும் சிறப்பு வலிப்பு நோய்க்கான சிகிச்சையை வழங்குகிறது.

**நெஞ்சக மருத்துவத்துறை:** இந்த துறையானது 1928 ஆம் ஆண்டு முதல் தாம்பரத்தில் உள்ள காசநோய் சுகாதார நிலையத்தில் செயல்பட்டு வருகின்றன.

**யோகா துறை:** யோகா துறையானது உடல் மற்றும் மனநலனை மேம்படுத்தவும் மற்றும் உடற்பயிற்சிகள் மற்றும் ஆசனங்கள் மூலம் நாள்பட்ட நோய்களைக் குணப்படுத்த உதவுகின்றன.

**24 மணி நேரமும் செயல்படும் மைய ஆய்வகம்:** NABL ஆல் சான்றளிக்கப்பட்ட நோயியல் மற்றும் உயிர் வேதியியல் மைய ஆய்வகம் 24 மணி நேரமும் செயல் பட்டு வருகிறது.

**பொது அறுவை சிகிச்சை துறை:** பொது அறுவை சிகிச்சை துறையானது தனித்தனி பல மாடி கட்டிடங்களில் செயல்படுகிறது. அனைத்து அறுவை சிகிச்சை முறைகளும் செய்யப்படுகின்றன. மேலும் தண்டையார்பேட்டை புறமருத்துவமனையை சேர்ந்த நோயாளிகள் அரசு ஸ்டான்லி மருத்துவமனை பொது அறுவை சிகிச்சை துறையால் நிர்வகிக்கப்படுகிறார்கள்.

**எலும்பியல் துறை:** இந்த துறையானது முழுமையான உபகரணங்களுடன் சிறப்பாக செயல்படுகின்றன. கோவிட் காலங்களில் கூட சிறப்பாக செயல்பட்டது. போஸ்டரியர் டிஸ்டல் டைபியல் பிளேட்டிங் சிஸ்டத்தில் சிறப்பாக செயல்பட்டதற்காக புதுமை விருதைப் பெற்றது.

**இயன்முறை மருத்துவம் மறுவாழ்வுத் துறை:** இந்த துறையானது எலும்பியல் மற்றும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை துறைகளுடன் ஒருங்கிணைந்து விரிவான நோயாளி பராமரிப்பு மற்றும் மறுவாழ்வு சேவைகளை வழங்கி வருகின்றன.

**பல் அறுவைச்சிகிச்சைத்துறை:** பல் அறுவைச்சிகிச்சைத்துறையின் வெளிநோயாளிப் பிரிவில் நோயாளிகள் பயன்பெறும் வகையில் 10 பல் நாற்காலிகளைக் கொண்டு சிறப்பாக செயல்படுகின்றன.

**காது,மூக்கு,தொண்டை துறை:** இந்த துறையானது மண்டைஓடு அறுவை சிகிச்சைகளை (Skull base surgeries) சிறப்பாக செயல்படுத்தி வருகின்றன. கோவிட் காலத்திலும் கூட கோக்லியர் உள்வைப்பு நடைமுறைகளை மேற்கொள்ளப்பட்டன. கூடுதலாக மியூகோர்மைகோசிஸ் நோயை விரிவாக கண்காணிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டன.

**கண் அறுவைச் சிகிச்சைத் துறை:** இந்த துறை கண்புரை மற்றும் கிளைக்கோமாவுக்கு தேவையான சிகிச்சையை அளித்துவருகிறது. கார்னியல் மாற்று அறுவை சிகிச்சைகளும் செய்யப்பட்டுவருகின்றன. மேலும் இந்த துறையால் கார்னியா நன்கொடையாளர் மீட்பும் சிறப்பாக மேற்கொள்ளப்படுகிறது.

**குழந்தைகள் அறுவை சிகிச்சைத் துறை:** குழந்தைகள் அறுவை சிகிச்சைத் துறை குழந்தைகளுக்கு அரிய மற்றும் சிக்கலான அறுவை சிகிச்சை முறைகளைச் செய்கிறது. மேலும், சவாலான நிகழ்வுகளுக்கு சிறப்பு கவனிப்பை உறுதி செய்கிறது.

**பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மற்றும் கை அறுவை சிகிச்சை மற்றும் மறுவாழ்வு துறை:** இந்த துறையானது தொழிற்சாலைகளில் ஏற்படும் காயங்களை குணப்படுத்த தீவிர சிகிச்சை அளித்து கவனித்துவருகின்றன மற்றும் கை மாற்று அறுவை சிகிச்சையும் சிறப்பாக செயல்படுத்தி வருகின்றன.

**இருதய மற்றும் வாஸ்குலார் அறுவை சிகிச்சைத் துறை:** இருதய மற்றும் வாஸ்குலார் அறுவை சிகிச்சைத் துறை CABG மற்றும் பிறவி இருதய அறுவை சிகிச்சைகளை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

**இரைப்பை குடல் அறுவைச்சிகிச்சை மீட்டுருவாக்கம் மருத்துவத் துறை:** இன்று வரை 107 கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகளைச் சிறப்பாக செயல்படுத்தி வருகின்றன.

**வாஸ்குலார் அறுவை சிகிச்சைத் துறை:** இந்த துறையானது அனஸ்டோமோடிக் நடைமுறைகள், வாஸ்குலார் ஸ்டென்ட்கள் மற்றும் ஒட்டு அறுவை சிகிச்சைகளைச் செயல்படுத்தி வருகிறது.

**சிறுநீரக அறுவை சிகிச்சைத் துறை:** இந்த துறையானது அனைத்து மரபணு சிறுநீரக அறுவை சிகிச்சைகளையும் செயல்படுத்தி வருகின்றன. இதுவரை 1014 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள் சிறப்பாக செய்யப்பட்டுள்ளன.

**நரம்பியல் அறுவை சிகிச்சைத் துறை:** நரம்பியல் அறுவை சிகிச்சைத் துறையானது அனைத்து தலை காயங்கள், கட்டிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளித்து குணப்படுத்தி வருகின்றன.

**அவசர சிகிச்சை பிரிவுத் துறை:** இந்த துறையானது முழுமையான உபகணரங்களுடன் சிறப்பாக செயல்படுகிறது மற்றும் பேரிடர் மேலாண்மை தொடர்பான பயிற்சிகளை வழங்குகின்றன.

**மகப்பேறு மருத்துத் துறை:** மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவத்துறையானது 1880 ஆம் ஆண்டு முதல் RSRM வளாகத்தில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இத்துறையானது சான்றளிக்கப்பட்டட செமன்க் (CEMONC) மையமாக இயங்கி வருகிறது.

## சென்னை அரசு மருத்துவமனை – ஒரு சிறப்பு பார்வை

தமிழ்நாட்டில் உள்ள அரசு பொது மருத்துவமனைகள் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு உயிர்நாடியாக இருந்து வருகின்றன. அனைத்து தரப்பு மக்களுக்கும் மலிவு விலையில், தரமான சுகாதார சேவைகளை வழங்கி வரும் இம்மருத்துவமனைகள், அதிநவீன வசதிகள் மற்றும் திறமையான மருத்துவ நிபுணர்களின் சேவையால் எண்ணற்ற நோயாளிகளுக்கு நம்பிக்கையும் குணமடைவதற்கான வாய்ப்பையும் அளித்து வருகின்றன.


இன்றைய காலகட்டத்தில் சிகிச்சைக்கான அதிக செலவு பல குடும்பங்களுக்கு பெரும் சவாலாக இருக்கும் சூழலில், மேம்பட்ட மற்றும் விலையுயர்ந்த சிகிச்சைகளைப் பெற அரசு மருத்துவமனைகளே பலருக்கும் ஒரே நம்பிக்கையாகத் திகழ்கின்றன. சென்னையில் அமைந்துள்ள ராயப்பேட்டை அரசு மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி (KMC), ஸ்டான்லி அரசு மருத்துவமனை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை போன்றவை தமிழக அரசால் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

அவற்றில் ராயப்பேட்டை அரசு மருத்துவமனை குறிப்பிடத்தக்க சிறப்பம்சங்களைக் கொண்டது. இந்த மருத்துவமனை 24 மணி நேரமும் செயல்படும் அவசர சிகிச்சை மையத்தைக் கொண்டுள்ளது. குறிப்பாக விபத்துகளுக்கான சிகிச்சையில் இது மிகவும் பிரபலமானதாகும். இம்மருத்துவமனை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது.

பொதுவாக அரசு பொது மருத்துவமனைகள் மருத்துவ முதன்மை அதிகாரி(Dean) மேற்பார்வையில், RMO,ARMO ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படுகின்றன. வெளிநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகள் என அனைத்து வகையான நோயாளிகளுக்கும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் மிகுந்த கனிவுடனும் சேவை மனப்பான்மையுடனும் சிகிச்சை அளிக்கின்றனர். தனியார் மருத்துவமனைகளில் கிடைக்கும் வசதிகளைப் போன்று, தேவையான பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் அரசு மருத்துவமனைகளிலும் வழங்கப்படுவதை உறுதி செய்ய நிர்வாகம் தொடர்ந்து அறிவுரைகள் வழங்கி வருகிறது.

ராயப்பேட்டை அரசு மருத்துவமனையின் மற்றொரு முக்கிய சிறப்பு, புற்றுநோய் சிகிச்சை தொடர்பான மருத்துவ புற்றுநோயியல், கதிர்வீச்சு புற்றுநோயியல் மற்றும் அறுவை சிகிச்சை புற்றுநோயியல் ஆகிய மூன்று பிரிவுகளும் ஒரே மருத்துவமனையில் செயல்படுவதாகும். புற்றுநோயாளிகளுக்கான சிகிச்சையில் புதிய தொழில்நுட்ப உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக அதிநவீன டெலிகோபால்ட் கதிர்வீச்சு சிகிச்சை கருவியான ‘ஈக்வினாக்ஸ்’ மூலம் சிகிச்சை வழங்கப்படுகிறது.

மேலும், இம்மருத்துவமனையில் ICU, ICCU போன்ற தீவிர சிகிச்சை பிரிவுகள், இருதயம், வயிறு மற்றும் குடல் நோய்கள், எலும்பு முறிவு, நுரையீரல் தொற்று, காய்ச்சல் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்படுகிறது. அனைத்து விதமான ரத்தப் பரிசோதனைகளும் இலவசமாக செய்யப்படுகின்றன. X-ray, MRI, CT Scan போன்ற பரிசோதனைகள் குறைந்த கட்டணத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. மருத்துவமனை வளாகத்திற்குள் நோயாளிகள் பரிசோதனைக்காக இடமாற்றம் செய்ய வேண்டியபோது, பணியாளர்கள் மூலம் சக்கர நாற்காலி வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டு பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.





# மக்கள் சமுதாய பணிகளின் சமூக சேவகர்!

சென்னை மாநகராட்சி மண்டலம்–4, வார்டு–37 மாமன்ற உறுப்பினராக செயல்பட்டு வரும் ஜெ.டில்லிபாபு M.A.,B.L., MC நிலைக்குழு (பணிகள்) பெருநகர மாநகராட்சி மாவட்ட தலைவர் வட சென்னை மேற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அவர்கள், சமூக நலம், கல்வி, சுகாதாரம், விளையாட்டு மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு மேம்பாட்டில் பல்வேறு முக்கிய முயற்சிகளை முன்னெடுத்து வருகிறார்.

மனித நலன், மன நலம் மற்றும் மதிப்பீடுகளைக் கொண்ட வாழ்க்கையை ஊக்குவிக்கும் இலாப நோக்கற்ற அமைப்பான ட்ரூ ரியலைசேஷன் சென்டர் நிறுவனத்தின் தலைவராக பணியாற்றி, சமூக சேவைகளில் நீடித்த பங்களிப்பை வழங்கி வருகிறார். கோவிட்19 காலகட்டம் மற்றும் பல்வேறு இயற்கை பேரிடர்களின் போது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அத்தியாவசிய நிவாரணப் பொருட்கள் மற்றும் ஆதரவுகளை வழங்கி அர்ப்பணிப்புடன் செயல்பட்டார்.

வார்டு முழுவதும் பொது வசதி மற்றும் உள்கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கில் 156 புதிய சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. குடிசைப் பகுதிகளில் உள்ள இரண்டு அரசுப் பள்ளிகள் இடிக்கப்பட்டு, ரூ.3.28 கோடி நிதி ஒதுக்கீட்டில் நவீன கற்றல் வசதிகளுடன் மறுகட்டமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதேபோல், ரூ.1.83 கோடி செலவில் ஆரம்ப சுகாதார நிலையம் முழுமையாக மறுகட்டமைக்கப்பட்டு பொதுமக்களின் சுகாதார அணுகல் மேம்படுத்தப்பட்டது.

பெண்களின் உடல்நலம் மற்றும் உடற்தகுதியை ஊக்குவிக்கும் வகையில், பெருநிறுவன நிதி ரூ.26.78 லட்சம் பயன்படுத்தி கிருஷ்ணமூர்த்தி நகரில் பிரத்யேக மகளிர் உடற்பயிற்சி கூடம் நிறுவப்பட்டது. எம்.கே.பி. நகரில் புதிய நூலகக் கட்டிடம் கட்டப்பட்டு, டி.என்.பி.எஸ்.சி மற்றும் யு.பி.எஸ்.சி தேர்வர்களுக்கான மேம்பட்ட படிப்பு வசதிகள் உருவாக்கப்பட்டன.

விளையாட்டு வளர்ச்சிக்காக, வட சென்னையில் 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான முதல் பிரத்யேக ஷட்டில் கோர்ட் ரூ.30.50 லட்சம் செலவில்










அமைக்கப்பட்டது. முல்லை நகரில் நவீன மிதக்கும் ஷட்டில் மைதானம் அமைக்க ரூ.2.20 கோடி நிதி திரட்டப்பட்டது. மேலும், ஒரு பெரிய கால்பந்து மைதானம் புதுப்பிக்கப்பட்டு, ரூ.1.28 கோடியில் புதிய பார்வையாளர் கேலரி கட்டப்பட்டது. எம்.கே.பி. நகரில் ரூ.1.10 கோடி செலவில் குத்துச்சண்டை மைதானம் அமைக்க ஒருங்கிணைப்பு செய்து, இளைஞர்களை விளையாட்டுகளில் ஈடுபட ஊக்குவித்தார்.

ஆட்டிசம் உள்ள குழந்தைகளுக்கான சிறப்பு விளையாட்டு மைதானம் திறக்கப்பட்டு, உள்ளடக்கிய விளையாட்டு உள்கட்டமைப்பு உறுதி செய்யப்பட்டது. வார்டில் உள்ள அனைத்து விளையாட்டு மைதானங்களும் நவீன உபகரணங்கள் மற்றும் வெளிப்புற உடற்பயிற்சி கூட வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டன. கடந்த நான்கு ஆண்டுகளாக ஆண்டுதோறும் குத்துச்சண்டை போட்டிகள் நடத்தப்பட்டு, 11 வயதுக்குட்பட்ட குழந்தைகள் தேசிய அளவிலான சிலம்பப் போட்டிகளில் பங்கேற்க நிபுணர் பயிற்சியுடன் உதவி வழங்கப்பட்டது.

12 ஆண்டுகளுக்குப் பிறகு கொடுங்கையூர் கால்வாய் மற்றும் கேப்டன் கால்வாய்களில் வண்டல் மண் அள்ளும் பணிகள் தொடங்கப்பட்டு, நீர் ஓட்டம் மேம்படுத்தப்பட்டு வெள்ள அபாயம் குறைக்கப்பட்டது. வார்டு முழுவதும் முக்கிய இடங்களில் ஏழு பொது கழிப்பறைகள் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டு சுகாதாரம் மேம்படுத்தப்பட்டது. மேலும், உள்ளூர் புதைகுழி ரூ.58.50 லட்சம் செலவில் புகை இல்லாத எல்பிஜி அடிப்படையிலான தகன அமைப்பாக மாற்றப்பட்டு, சுற்றுச்சூழல் மற்றும் பொது சுகாதாரம் பாதுகாக்கப்பட்டது.

இவ்வாறு, மாமன்ற உறுப்பினர் வார்டு–37 இன் முழுமையான சமூக முன்னேற்றத்திற்காக பல்துறை வளர்ச்சி பணிகளை தொடர்ந்து முன்னெடுத்து வருவது பொதுமக்களிடையே பாராட்டைப் பெற்றுள்ளது.

## மக்கள் தெரிந்திருக்க வேண்டிய பொதுவான சட்டங்கள்

ஒவ்வொரு குடிமகனும் தன் உரிமைகளையும் கடமைகளையும் புரிந்து கொள்ள சில அடிப்படை சட்டங்களை அறிந்திருப்பது மிகவும் அவசியம். இதனால் தேவையற்ற பிரச்சனைகள் தவிர்க்கப்படுகின்றன மற்றும் சட்ட ரீதியாக பாதுகாப்பு கிடைக்கும்.



**1. இந்திய அரசியலமைப்பு (Constitution of India)** •Article 14 – சட்டத்தின் முன் அனைவரும் சமம் •Article 19 – கருத்துச் சுதந்திரம், பேசும் உரிமை •Article 21 – உயிர் மற்றும் தனிப்பட்ட சுதந்திர உரிமை அரசு மற்றும் காவல் துறை கூட இந்த உரிமைகளை மீற முடியாது.

**2. இந்திய தண்டனைச் சட்டம் (IPC – Indian Penal Code)** •IPC 107 / 108 – குற்றத்திற்கு தூண்டுதல்

•IPC 299 / 300 – கொலை தொடர்பான சட்டம்

•IPC 354 – பெண்களை அவமதிக்கும் செயல்

•IPC 420 – மோசடி (Fraud) குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படுகிறது.

**3. காவல் விசாரணை தொடர்பான சட்டங்கள்**

•போலீஸ் உங்களை காரணமின்றி கைது செய்ய முடியாது •கைது செய்யப்படும் போது காரணம் சொல்ல வேண்டும் •24 மணி நேரத்திற்குள் நீதிபதியிடம் ஆஜர்படுத்த வேண்டும் •வழக்கறிஞர் உதவி பெற உரிமை உண்டு

**4. பெண்கள் பாதுகாப்பு சட்டங்கள்**

•பெண்கள் மீது குடும்ப வன்முறை தடுப்பு சட்டம் 2005

•பணியிட பாலியல் தொல்லை தடுப்பு சட்டம் 2013

•Dowry Prohibition Act – வரதட்சணை தடை பெண்கள் சட்டப்படி முழு பாதுகாப்பு பெறுவர்.

**5. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் (Consumer Protection Act – 2019)** •குறைபாடு உள்ள பொருள் / சேவைக்கு எதிராக புகார் அளிக்கலாம்

•ஆன்லைன் வாங்குதல்களுக்கும் பொருந்தும் District / State Consumer Forum-ல் புகார் செய்யலாம்.

**6. சாலை மற்றும் போக்குவரத்து சட்டங்கள்**

•ஹெல்மெட் / சீட் பெல்ட் கட்டாயம்

•குடிபோதையில் வாகனம் ஓட்டுதல் தண்டனைக்குரியது

•உரிய உரிமம் (Driving License) அவசியம்

**7. தகவல் அறியும் உரிமைச் சட்டம் (RTI Act & 2005)**

•அரசு அலுவலகங்களில் தகவல் கேட்க உரிமை

•30 நாட்களுக்குள் பதில் பெற வேண்டும் - ஊழலை கட்டுப்படுத்த உதவும்.

**8. குழந்தைகள் பாதுகாப்பு சட்டங்கள்**

•POCSO Act – குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள்

•Child Labour Act – குழந்தை தொழிலாளர் தடை

**9.சொத்து மற்றும் வாரிசு தொடர்பான சட்டங்கள்**

•உயில் (Will) எழுத சட்ட உரிமை

•சொத்து பங்கீடு சட்டப்படி நடக்கும்

•பெண்களுக்கு சம சொத்து உரிமை

**10. ஆன்லைன் - சைபர் சட்டங்கள்**

•IT Act, 2000 – சைபர் குற்றங்கள்

•ஆன்லைன் மோசடி, போலி செய்திகள் தண்டனைக்குரியது

•சமூக வலைதளங்களில் அவதூறு பதிவு சட்டவிரோதம்

சட்டம் தெரியாதது காரணம் ஆகாது (Ignorance of Law is not an excuse). அடிப்படை சட்டங்களை அறிந்து கொள்ளுதல் ஒவ்வொரு குடிமகனின் கடமையும் பாதுகாப்பும் ஆகும்.

















# மழைநீர் சேமிப்பு திட்டம்

## வருங்கால தலைமுறைக்கான விழிப்புணர்வு




இன்று சேமிக்கும் மழைநீர் - நாளைய குடிநீர்
மழைநீரை சேமிப்போம், நிலத்தடி நீரை பாதுகாப்போம்
வரும் தலைமுறைக்கு நீர் வளம் உறுதி செய்வோம்
ஒவ்வொரு வீட்டிலும் மழைநீர் சேமிப்பு அவசியம்

**மழைநீர் சேமிப்பு எளிய அறிவுரை**

வீட்டின் கூரையில் விழும் மழைநீரை குழாய்கள் மூலம் சேகரிக்க வேண்டும்.

முதற்கட்ட வடிகட்டியை (filter) அமைத்து மண், இலைகளை நீக்க வேண்டும்.

சோக் பிட் / ரீசார்ஜ் கிணறு மூலம் மழைநீரை நிலத்தடியில் செலுத்த வேண்டும்.

சேமிப்பு தொட்டி மூலம் மழைநீரை வீட்டு பயன்பாட்டிற்கு வைத்துக்கொள்ளலாம்.


குழாய்கள் மற்றும் வடிகட்டிகளை காலந்தோறும் சுத்தம் செய்ய வேண்டும்.

மழைநீர் வீணாக சாலையில் ஓட விடக்கூடாது.

“மழைநீர் வீணாக விடாதீர் - சேமித்து நாளையை காப்பீர்”

“மழைநீர் சேமிப்பு- வருங்கால வாழ்வின் அடித்தளம்”

“இன்றே சேமிப்போம், நாளை காப்போம்”







KVM
KASI V MOTORS
Dealers in : E royce I am Electic
All Kinds of E Royce Two Wheelers & Three Wheelers Sales & Service
e⚡ROYCE
I AM ELECTRIC
நாளுக்குநாள் விலையேறும் பெட்ரோலியம் விலை !
வாருங்கள் மாற்றத்திற்கு
குறைந்தவிலையில்
ELECTRIC BIKE
வெறும் 10 பைசாவில் 1 கிலோமீட்டர் வரை பயணிக்கலாம்
தொடர்புக்கு
7358730507
6379333023
3 வருடம் பேட்டரி வாரண்டி
டூவீலர் மட்டும்
GO GREEN !
GO E-ROYCE !
No.1/34, Andalkuppam, Manali New Town, Chennai - 600 103.

# ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி

## பொழிச்சலூர், புனித தோமையார் மலை ஒன்றியம்
## செங்கல்பட்டு மாவட்டம்



# பொழிச்சலூரில்.... புனித தோமையர்மலை ஒன்றிய பள்ளியின் சிறப்புகள்

செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் அடுத்துள்ள பொழிச்சலூர் பிரதான சாலையில் அமைந்துள்ள புனித தோமையர்மலை ஒன்றியம், பொழிச்சலூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறையின் வழிகாட்டுதலின்படி, கற்றல்–கற்பித்தல் விளைவுகளுடன் இணைந்து சமூகப் பண்புகள் மற்றும் குடிமக்கள் கடமைகளை திறமையான தலைமையாசிரியர் மற்றும் அனுபவமிக்க ஆசிரியர்களால் கற்பித்து, சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இப்பள்ளியில் கட்டணமில்லா எளிய தமிழ்வழிக் கல்வி மற்றும் ஆங்கிலவழிக் கல்வி வழங்கப்படுகிறது. மேலும் தமிழ்நாடு அரசு வழங்கும் பல்வேறு நலத்திட்டங்களின் கீழ், விலையில்லா பாடநூல்கள், குறிப்பேடுகள், சீருடைகள், புத்தகப்பை, வண்ணப் பென்சில்கள், காலணிகள், நிலவரைப்படம், கணித உபகரணப்பெட்டி, பேருந்து பயண அட்டை ஆகியவை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. மேலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் பட்டியலின மாணவிகளுக்கு 3 ஆம் வகுப்பு முதல் 6 ஆம் வகுப்பு வரை பெண் கல்வி உதவித் தொகை (Girls Incentive) வழங்கப்படுகிறது. பள்ளி வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக நம்ம ஸ்கூல் – நம்ம ஊர்ப்பள்ளி (NS–NOP) திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதன் மூலம் பள்ளி மேம்பாட்டில் பொதுமக்கள், கல்வி ஆர்வலர்கள் மற்றும் பெற்றோர்களின் பங்களிப்பை உறுதி செய்யும் பள்ளி மேலாண்மைக் குழு (SMC) மற்றும் முன்னாள் மாணவர்கள் குழு (Alumni Association) ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

மாணவர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு வசதிகள் மற்றும் நலத்திட்டங்கள் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான சலுகைகள் அடையாள அட்டை வழங்கப்படுகிறது. மருத்துவ முகாம் மற்றும் ஊக்கத்தொகை ஆரோக்கியத்திற்காக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் வாரத்திற்கு 5 முட்டையுடன் கூடிய சத்தான உணவு வழங்கப்படுகிறது. வாசிப்புத்திறன் மேம்பாடு – சிறார் இதழ்கள் “ஊஞ்சல்” மற்றும் “தேன்சிட்டு” மூலம் இளம் விஞ்ஞானி விருது (Inspire Award & MANAK) பெற்ற மாணவர்களுக்கு உதவித் தொகை விபத்தில் பெற்றோரை இழந்த மாணவர்கள் (Bread Winning Scheme) – ரூ.75,000 உதவி தொகை பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டு திட்டம் – அரசு தொடக்க/நடுநிலைப்பள்ளிகளுக்கு புதிய வகுப்பறைகள் அமைத்தல். திறனறித் தேர்வில் தேர்ச்சி (NMMS) பெற்ற 8 ஆம் வகுப்பு மாணவர்கள் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை மாதம் ரூ. 1,000 உதவி தொகை. அரசுப் பள்ளி மாணவர்களுக்கு கிடைக்கும் முன்னுரிமைகள் மற்றும் கல்வி வசதிகள் கல்வி முன்னுரிமைகள் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு அனைத்து அரசு கல்லூரிகளில் பயில்வதற்கான அரசின் பொறுப்பு உறுதி.

பெண்கள் மாணவர்கள் 1 ஆம் வகுப்பு முதல் 12

ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளி மாணவிகளுக்கு **மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திட்டம்:** உயர்கல்விக்காக மாதம் ரூ. 1,000 உதவி தொகை. தமிழ் வழி மாணவர்கள் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் பயின்றவர்களுக்கு அரசு பணிகளில் 20% முன்னுரிமை. மருத்துவப் படிப்பு 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளி மாணவர்களுக்கு 7.5% இடஒதுக்கீடு நான் முதல்வன் திட்டம் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை மாணவர்களுக்கு.

**கல்வி முறைகள் மற்றும் கற்றல் மேம்பாடு**

1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை மாணவர் மையக் கற்றலை உறுதி செய்யும் எண்ணும் எழுத்தும் (EE) முறை **6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை** படைப்பாற்றல் கல்வி முறை (ALM) குறை தீர்க்கும் கற்பித்தல் (Remedial Teaching) HITECH LAB மூலம் நவீன தொழில்நுட்ப கணினி வழிக்கல்வி (ICT) எண்ணும் எழுத்தும்! மாணவர் மையக் கற்றல்– கற்பித்தல் செயல்பாடுகள்

**பள்ளி சிறப்பம்சங்கள்:**

இப்பள்ளியில் மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு ஏற்ற ஆடல், பாடல், விளையாட்டு, ஓவியம், மேடைப்பேச்சு, கதைச் சொல்லல், நாடகம், பொம்மலாட்டம் போன்ற செயல்பாடுகள் மூலம் மகிழ்வான கற்றல் நடைபெறுகிறது. 1ஆம் வகுப்பில் இருந்து 7ஆம் வகுப்பு வரை மூன்று பருவ முறை (TRIMESTER) மூலம் கற்றலை எளிதாக்குகிறது. பெற்றோரின் விருப்பப்படி தமிழ் / ஆங்கிலம் மற்றும் சிறுபான்மை மொழிகள் (தெலுங்கு / உருது) வழித்தடக் கல்வி.

மாணவர்களின் ஆளுமைத்திறன் மேம்பாட்டிற்கு "மகிழ்முற்றம்" அமைப்பு. மாணவர் பாதுகாப்பு ஆலோசனை குழு மூலம் குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழல். வாசிப்பு இயக்கம் மூலம் மாணவர்களை சுயமாக வாசிப்பில் ஈடுபடுத்துதல். காற்றோட்டமான வகுப்பறைகள், சுத்தமான குடிநீர், சுகாதாரமான கழிப்பிட வசதிகள் மற்றும் மின்வசதி கொண்ட திறன்மிகு வகுப்பறைகள். பள்ளியில் 1ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை அனைத்து வசதிகளும் உள்ளடக்கப்பட்டு மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். நம் நோக்கம் குழந்தைகளை அரசுப் பள்ளியில் சேர்க்கவும், எதிர்காலத்தை வளமாக்கவும்.

**நம் பள்ளி! நம் பெருமை!**

# மாணவர்களை ஊக்குவிக்கும் விளையாட்டுகள்

விளையாட்டு சமுதாயத்தில் மக்களுக்கு உற்சாகம், ஆர்வம் மற்றும் ஒன்றுபட்ட உணர்வை ஏற்படுத்துகின்றன. விளையாட்டு என்பது வெறும் பொழுதுபோக்கு அல்ல; அது ஒழுக்கம், ஒற்றுமை, தன்னம்பிக்கை மற்றும் உடல் ஆரோக்கியத்தை வளர்க்கும் ஒரு முக்கியமான வழியாகும்.



நாள்தோறும் வெளிவரும் விளையாட்டு செய்திகள் மூலம் தேசிய மற்றும் சர்வதேச அளவில் நடைபெறும் போட்டிகள், வீரர்களின் சாதனைகள், புதிய சாதனைகள், வெற்றிகள் மற்றும் தோல்விகள் பற்றி மக்கள் அறிந்து கொள்கிறார்கள். இது இளைஞர்களை விளையாட்டின் மீது ஆர்வம் கொள்ளச் செய்து, தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள ஊக்குவிக்கிறது.

விளையாட்டு செய்திகள் விளையாட்டு உணர்வை (Sportsmanship) வளர்க்க உதவுகின்றன. வெற்றி அடையும் போது தாழ்மை, தோல்வி அடையும் போது பொறுமை ஆகியவற்றை கற்றுத் தருகிறது. மேலும், நாடுகளுக்கிடையேயான நல்லிணக்கத்தையும் நட்பையும் விளையாட்டுகள் உருவாக்குகின்றன. அதில் கிரிக்கெட் மற்றும் கால்பந்து உலகம் முழுவதும் அதிக ரசிகர்களைக் கொண்ட விளையாட்டுகளாக உள்ளன.

**கிரிக்கெட்**

கிரிக்கெட் இந்தியாவில் மிகவும் பிரபலமான விளையாட்டாகும். இந்திய கிரிக்கெட் அணி சர்வதேச போட்டிகளில் சிறப்பாக விளையாடி நாட்டின் பெருமையை உயர்த்தி வருகிறது. டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20 போட்டிகள் ரசிகர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளன. இளம் வீரர்களின் திறமை மற்றும் அனுபவமிக்க வீரர்களின் வழிகாட்டுதல் இந்திய கிரிக்கெட்டின் பலமாக உள்ளது.

**கால்பந்து**

கால்பந்து உலகின் மிகப் பிரபலமான விளையாட்டுகளில் ஒன்றாகும். ஃபிஃபா உலகக் கோப்பை, யூரோ கப் போன்ற போட்டிகள் உலகளவில் கோடிக்கணக்கான ரசிகர்களை ஈர்க்கின்றன. இந்தியாவிலும் கால்பந்தின் மீது ஆர்வம் அதிகரித்து வருகிறது. இந்திய சூப்பர் லீக் (ISL) போன்ற போட்டிகள் இளைஞர்களை கால்பந்துக்கு ஊக்குவிக்கின்றன.

விளையாட்டு செய்திகள் சமூகத்தை உற்சாகமாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவுகின்றன. அவை இளைஞர்களுக்கு ஊக்கமாக இருந்து, ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் அடித்தளமாக விளங்குகின்றன.

இன்றைய காலத்தில் ஊடகங்கள், தொலைக்காட்சி, இணையம் மற்றும் சமூக வலைதளங்கள் மூலம் விளையாட்டு செய்திகள் உடனுக்குடன் மக்களை அடைகின்றன. இதனால் விளையாட்டின் முக்கியத்துவம் மேலும் அதிகரித்துள்ளது.



# 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு மாணவர்கள் பொது தேர்வை இலகுவாக எழுத தேவையான முக்கிய குறிப்புகள்

**படிப்பு தயாரிப்பு**

•பாடத்திட்டத்தை முழுமையாகப் புரிந்து கொண்டு அத்தியாயம் வாரியாக படிக்கவும்.

•முக்கிய வரையறைகள், சூத்திரங்கள், தேதி- நிகழ்வுகள் ஆகியவற்றை தனியாக குறிப்பெடுக்கவும்.

•கடந்த 3-5 ஆண்டுகளின் வினாத்தாள்கள் மற்றும் மாதிரி வினாத்தாள்கள் பயிற்சி செய்யவும்.

•கடினமான பகுதிகளை ஆசிரியர் அல்லது நண்பர்களிடம் கேட்டு தெளிவுபடுத்தவும்.

**நேர மேலாண்மை**

•தினமும் ஒரு படிப்பு அட்டவணை அமைத்து அதனைப் பின்பற்றவும்.

•ஒரு பாடத்திற்கு அதிக நேரம் செலவிடாமல், அனைத்து பாடங்களுக்கும் சமமாக நேரம் ஒதுக்கவும்.

•தேர்வு முன் நாட்களில் புதிய பாடங்களைத் தொடங்காமல் மீளாய்வு (Revision) செய்யவும்.

**தேர்வு எழுதும் முறை**

வினாத்தாளை முதலில் முழுவதும் வாசித்து, எளிதான வினாக்களை முதலில் எழுதவும்.

•பதில்களை தலைப்புடன், தெளிவாக, அழகான எழுத்தில் எழுதவும்.

•முக்கிய வார்த்தைகளை அடிக்கோடு இட்டு குறிப்பிடவும்.

•நேரத்தை சரியாகப் பயன்படுத்தி, இறுதியில் பதில்களை சரிபார்க்கவும்.

**மனநிலை - உடல்நலம்**

•போதுமான உறக்கம் மற்றும் ஆரோக்கியமான உணவு அவசியம்.

•அதிக பதட்டம் வேண்டாம் - தன்னம்பிக்கை முக்கியம்.

•இடையில் சிறிய ஓய்வு எடுத்தால் கவனம் அதிகரிக்கும்.

தேர்வு நாளன்று

•தேவையான ஹால் டிக்கெட், பேனா, பென்சில் போன்றவை முன்கூட்டியே தயார் செய்யவும்.

•தேர்வு மையத்திற்கு நேரத்துக்கு முன் செல்லவும்.

•அமைதியாக, நம்பிக்கையுடன் தேர்வை எழுதவும்.

தொடர்ச்சியான பயிற்சி + நம்பிக்கை = வெற்றி

**10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு மாணவ-மாணவிகள் படிப்பை முடித்த பிறகு என்ன தேர்ந்தெடுக்கலாம்? வழிகாட்டி குறிப்புகள்**

**10ம் வகுப்பு முடித்த பின் கல்வி வழிகள்**

**11 - 12 (மேல்நிலை கல்வி)**

•கணிதம்-உயிரியல் மருத்துவர், பொறியாளர், உயிரியல் துறை

•கணிதம்-கணினி அறிவியல் - IT, இன்ஜினியரிங்

•வணிகவியல் / கணக்கியல் - CA, B.Com, MBA

•கலை / மனிதவியல் UPSC, TNPSC, சட்டம், ஆசிரியர்

டிப்ளமா (Polytechnic)

•மெக்கானிக்கல், எலக்ட்ரிக்கல், சிவில், எலக்ட்ரானிக்ஸ்

•3 ஆண்டுகள் - விரைவில் வேலை வாய்ப்பு

ITI (Industrial Training Institute)

•எலக்ட்ரீஷியன், ஃபிட்டர், வெல்டர் போன்ற தொழில்நுட்ப பயிற்சி

•வேலை + சம்பாதிப்பு வாய்ப்பு

முடிவு எடுக்கும் போது கவனிக்க வேண்டியவை

•உங்கள் ஆர்வம்

•திறன் (கணக்கு, மொழி, தொழில்நுட்பம்)

•எதிர்கால வேலை வாய்ப்புகள்

**12ம் வகுப்பு முடித்த பின்** அறிவியல் (Science)

•MBBS / BDS / Nursing / Pharmacy

•Engineering (BE / BTech)

•B.Sc (Physics, Chemistry, Maths, Computer Science, Biotechnology)

வணிகவியல் (Commerce)

•B.Com / BBA / CA / CMA / CS

•Banking, Accounting, Finance

கலை (Arts / Humanities)

•BA (History, Economics, Tamil, English, Psychology)

•Law (LLB)

•Civil Services (UPSC / TNPSC)

தொழில்முறை - திறன் சார்ந்த படிப்புகள்

•Animation, Graphic Design

•Hotel Management

•Digital Marketing

•Data Analysis / AI Basics

•Vocational Courses

**சரியான பாதையை தேர்வு செய்ய உதவும் குறிப்புகள்**

•நண்பர்களைப் பார்த்து முடிவு செய்ய வேண்டாம்

•பெற்றோர் + ஆசிரியர் + Career Counselor ஆலோசனை பெறவும்

•குறுகிய கால லாபம் அல்ல, நீண்ட கால வளர்ச்சி பார்க்கவும்

•உங்களுக்குப் பிடித்ததைத் தேர்ந்தெடுத்தால் வெற்றி நிச்சயம்

**நினைவில் கொள்ளுங்கள்:**

ஒரே ஒரு பாதை தான் வெற்றி என்றில்லை.

உங்கள் திறமைக்கு ஏற்ற பாதை தான் சிறந்தது.

ட்டப்படிப்பு முடித்த மாணவ—மாணவிகள் மத்திய, மாநில

**அரசு தேர்வுகள் எழுதுவதும், அதன் மூலம் அரசு வேலை பெறுவதும் - விளக்கம்**

பட்டப்படிப்பு (UG Degree) முடித்த மாணவ–மாணவிகள் **மத்திய அரசு மற்றும் மாநில அரசு நடத்தும் பல்வேறு போட்டித் தேர்வுகளை எழுதுவதன் மூலம் அரசாணை** (Government) **வேலைகளை பெற முடியும்.**

**மத்திய அரசு தேர்வுகள்** (Central Government Exams)

மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் (UPSC), பணியாளர் தேர்வாணையம் (SSC), வங்கி தேர்வுகள் போன்ற அமைப்புகள் மூலம் தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

**முக்கிய தேர்வுகள்:**

•UPSC Civil Services Exam

(IAS, IPS, IFS போன்ற உயர்நிலை பணிகள்)

•SSC Exams

(SSC CGL, CHSL, MTS – அமைச்சகங்கள், துறைகள்)

•Bank Exams

(IBPS PO, Clerk, SBI PO, Clerk)

•RRB Exams

(ரயில்வே துறையில் பணிகள்)

•Central Police Forces Exams

(CRPF, BSF, CISF, ITBP)

**தகுதி:**

•ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு

•வயது வரம்பு (தேர்விற்கு ஏற்ப மாறுபடும்)

**மாநில அரசு தேர்வுகள்** (State Government Exams – **தமிழ்நாடு**)

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலம் தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

**முக்கிய தேர்வுகள்:**

•TNPSC Group I

(DSP, Collector, Assistant Commissioner)

•TNPSC Group II / IIA

(Sub-Registrar, Municipal Commissioner, Assistant Section Officer)

•TNPSC Group III

•TNPSC Group IV

(VAO, Junior Assistant, Typist)

•ஆசிரியர் தேர்வுகள் (TRB)

•தமிழ்நாடு காவல் துறை தேர்வுகள்

**தகுதி:**

•SSLC / HSC / பட்டப்படிப்பு (பணிக்கு ஏற்ப)

•தமிழில் எழுத/படிக்க தெரிந்திருக்க வேண்டும்

**அரசாணை வேலைகளின் நன்மைகள்**

•வேலை பாதுகாப்பு

•நிலையான சம்பளம்

•ஓய்வூதியம்

•மருத்துவ வசதி

•பதவி உயர்வு வாய்ப்பு

•சமூக மதிப்பு

**தேர்வு தயாரிப்பிற்கான வழிகாட்டுதல்**

•தேர்வு அறிவிப்புகளை தொடர்ந்து கவனிக்க வேண்டும்

•பாடத்திட்டத்தை முழுமையாக புரிந்து படிக்க வேண்டும்

•முந்தைய ஆண்டு வினாத்தாள்கள் பயிற்சி செய்ய வேண்டும்

•தினசரி செய்தித்தாள் வாசிக்கும் பழக்கம்

•பயிற்சி மையம் / சுயபடிப்பு

பட்டப்படிப்பு முடித்த மாணவ–மாணவிகள் திட்டமிட்டு, தொடர்ச்சியான முயற்சியுடன் மத்திய மற்றும் மாநில அரசு தேர்வுகளை எழுதி, அரசாணை வேலை பெற முடியும். முயற்சி, ஒழுக்கம் மற்றும் நேர மேலாண்மை தான் வெற்றியின் முக்கிய பங்காளிப்பாக காணப்படுகிறது.

நியூ மொகல் பிரியாணி & பாஸ்ட் புட்ஸ்
NEW MOGHAL BRIYANI & FAST FOOD







All Party Orders Undertaken Here
திருமணம் மற்றும் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும்
சிறந்த முறையில் பிரியாணி
ஆர்டரில் பெயரில் செய்து தரப்படும்
தொடர்புக்கு : அல்தஃப் - 9710016629
எண்: 340, திருவல்லிகேணி நெடுஞ்சாலை, சென்னை -05
(ஆதாம் மார்க்கெட் பஸ் ஸ்டாப் )

# மார்னிங் டைம்ஸ் இதழின் சமூக செயல்பாடுகள்..

வியாசர்பாடி, MKB நகர், மண்டலம் 04, வார்டு 37, 4வது மெயின் ரோடு பகுதியில் சாலையில் குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டு, குடிநீர் கசிந்ததால், அப்பகுதியில் தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த குடிநீர் வாரிய அதிகாரிகள், குடிநீர் குழாயை சீர் செய்து, சாலையில் ஏற்பட்ட பள்ளத்தை சீர் செய்யும் பணியில் ஈடுபட்டு பணி நிறைவடைந்தது.

ஆனால் அந்த பகுதியில் பணி முடிந்தும் சாலையில் சரியான முறையில் சிமெண்ட் போடாமல் பணியாளர்கள் விட்டு சென்றதால் பள்ளத்தில் மேல் கற்கள் சிதறி கிடந்தன.

இந்நிலையில், மார்னிங் டைம்ஸ் பத்திரிகையின் உதவி ஆசிரியர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, பள்ளத்தை சீரமைத்து தருமாறு கேட்டுக்கொண்டார். இதையடுத்து அப்பகுதியில் பள்ளத்தில் மேல் சிமெண்ட் போடப்பட்டு பள்ளம் சீர் செய்யப்பட்டது.






வியாசர்பாடி மகாகவி பாரதி நகர் 10 வது கிழக்கு குறுக்கு தெருவில் கழிவுநீர் சேம்பர் சிமெண்ட் மேல்முடி சேதமடைந்து காணப் பட்டது. இது குறித்து, மார்னிங் டைம்ஸ் பத்திரிக்கை உதவி ஆசிரியர் M.அப்துல்ரஹ்மான் சம்பந்தப்பட்ட சென்னை குடிநீர் வாரிய அதிகாரிகளை தொடர்பு கொண்டு சேதமடைந்த கழிவு நீர் சேம்பர் சிமெண்ட் மூடியை மாற்றி அமைக்க கோரிக்கை விடுத்தார். அதன் அடிப் படையில் சென்னை குடிநீர் வாரிய பணியாளர்கள் பணிகளை மேற்கொண்டு கழிவுநீர் சேம்பர் சிமெண்ட் மேல் மூடி மாற்றி அமைக்கப்பட்டது.

## பிராட்வே ஏழு கிணறு பகுதியில் மழைநீர் வடிகால் சேம்பர் சீரமைப்பு!

பிராட்வே, ஏழு கிணறு தெரு பகுதியில் மழை நீர் வடிகால் சேம்பர் மேல்பாகம் சேதம் அடைந்து மோசமான நிலை காணப்பட்டதால் அவ்வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமத்துடன் சென்று வந்தனர். இதுகுறித்து, மார்னிங் டைம்ஸ் பத்திரிகையின் உதவி ஆசிரியர் சம்பந்தப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்05, வார்டு 55 அதிகாரியை தொடர்பு கொண்டு ஏதேனும் அசம்பாவிதம் ஏற்படும் முன் இதனை உடனடியாக சரி செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தார். அதனை தொடர்ந்து, சென்னை மாநகராட்சி அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டு, விரைந்து நடவடிக்கை எடுத்து மாநகராட்சி பணியாளர்கள் பணிகளை மேற்கொண்டு மழைநீர் வடிகால் சேம்பர் மேல்மூடி மாற்றி அமைக்கப்பட்டு சீரமைக்கப்பட்டது.





## பத்திரிக்கையாளரின் கோரிக்கை ஏற்று வார்டு உறுப்பினர் விரைந்து நடவடிக்கை



சேப்பாக்கம், திருவல்லிக்கேணி 115வது வார்டுக்கு உட்பட்ட சூரப்ப முதலி தெருவில் குப்பைகள் குவிந்து, அகற்றப்படாததால் அப்பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்பட்டது. குறிப்பாக கட்டிடம் உடைக்கப்பட்ட ரப்பிஸ், கேபிள் ஒயர்கள் போன்ற குப்பை குவிந்து காணப்பட்டது. இதனால், கொசு உற்பத்தி அதிகரித்து வந்தது. அந்த பகுதியில் கோயில், பள்ளிக்கூடம் உள்ளதால் தினமும் ஏராளமான பக்தர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் காலை மற்றும் மாலை என இருவேளையும் வந்து செல்கின்றனர். குப்பை வெகு நாளாக அகற்றப்படாததால் கடும் துர்நாற்றம் வீசுவதால் பொது மக்கள், கோயிலுக்கு வரும் பக்தர்கள் முகம் சுளித்தபடி வந்து செல்கின்றனர்.

எனவே, இது குறித்து மார்னிங் டைம்ஸ் பத்திரிக்கையின் துணை ஆசிரியர் முஹம்மது ரவூப் அந்த பகுதி 115வது வார்டு உறுப்பினர் ஈஸ்வரி வெங்கடேசன் அவர்களை தொடர்பு கொண்டு வார்டுக்கு உட்பட்ட சூரப்ப முதலி தெருவில் குப்பைகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்தார். இதையடுத்து, வார்டு உறுப்பினர் சம்மந்தப்பட்ட சென்னை மாநகராட்சி அதிகாரிகளை தொடர்பு கொண்டு தேங்கிய குப்பைகளை அகற்றுமாறு உத்தரவிட்டார். அதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி பணியாளர்கள் துரித நடவடிக்கை மேற்கொண்டு அப்பகுதியில் குப்பைகள் அகற்றப்பட்டது.

## சாலையில் சாய்ந்த நிலையில் இருந்த மின்கம்பம் சீரமைப்பு



'மார்னிங் டைம்ஸ்' பத்திரிக்கையின் செய்தியாளர் எதிரொலியாக ஐஸ் பகுதியில், சாய்ந்த நிலையில் இருந்த மின்கம்பம் சீரமைக்கப்பட்டது. சென்னை ராயப்பேட்டை, ஐஸ் ஹவுஸ், கிரசண்ட் மருத்துவமனை அருகில், சாலையில் ஏராளமான இரு சக்கர வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இந்த சாலையில் உள்ள ஒரு மின் கம்பம் பழுதடைந்து மிகவும் சாய்ந்து ஆபத்தான நிலையில் இருந்தது. இந்த வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் எப்போது மின்கம்பம் சாய்ந்து விழுமோ என்ற அச்சத்தில் இருந்தனர். இந்த மின்கம்பத்தை சீரமைக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதுகுறித்து, மார்னிங் டைம்ஸ் பத்திரிக்கையின் சென்னை மாவட்ட செய்தியாளர் ரியாஸ் அலி மூலம் புகைப்படத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதன் எதிரொலியாக சென்னை மாநகராட்சி அதிகாரிகள், சாய்ந்த நிலையில் இருந்த மின்கம்பத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். பின்னர் மின்வாறிய பணியாளர்கள் உதவியுடன் சாய்ந்த மின் கம்பத்தை சரி செய்து தாழ்வாக சென்ற மின்கம்பியை சீரமைத்தனர். இதை தொடர்ந்து உடன் நடவடிக்கை எடுத்த சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கும், மின்வாரிய பணியாளர் களுக்கும், பொது மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

## பத்திரிக்கையாளர் கோரிக்கை ஏற்று சேதமடைந்ததை அகற்றி புதிய மின்கம்பம் அமைப்பு





மார்னிங் டைம்ஸ் செய்தியாளர் எதிரொலியாக திருவண்ணாமலை பகுதியில் சேதமடைந்ததை அகற்றி புதிய மின்கம்பம் அமைக்கப்பட்டது. திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், புதுப்பாளையம் ஒன்றியம், நரசிங்கநல்லூர் ஊராட்சி, முதல் வார்டு பகுதி குடியிருப்புகளுக்கு மத்தியில் சேதம் அடைந்திருந்த மின்கம்பம் அகற்றப்பட்டு புதிய மின்கம்பம் அமைக்கப்பட்டது. நரசிங்கநல்லூர் ஊராட்சி குடியிருப்புகளுக்கு மத்தியில் மின் கம்பங்கள் உள்ளது. உயர் அழுத்த மின்சாரம் செல்லும் இந்த மின்கம்பங்களில் பெரும்பான்மையானவை சேதமடைந்துள்ளது. மின்கம்பத்தில் சிமெண்ட் பெயர்ந்து கம்பிகளால் தாங்கி நிற்கின்றது. ரோட்டின் ஓரத்திலும் இருப்பதால் வாகனங்கள் செல்லும்போது எதிர்பாராத விதமாக உரசினாலே மின்கம்பம் கீழே விழும் அபாயத்தில் இருந்தது. மக்கள் நடமாடும் போது மின்கம்பம் கீழே விழுந்தால் பெரிய அசம்பாவிதம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே சேதம் அடைந்த மின்கம்பங்களை மாற்றி புதிய மின் கம்பம் அமைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள், சமூக ஆர்வலர் சார்பில் மார்னிங் டைம்ஸ் பத்திரிக்கை துணை ஆசிரியர் முஹம்மது ரவூப் அவர்களை தொடர்பு கொண்டு புகைப்படத்துடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்து இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

இதுகுறித்து, மார்னிங் டைம்ஸ் பத்திரிகை துணை ஆசிரியர் அப்பகுதி மின்வாரிய அதிகாரி மற்றும் ஊராட்சிமன்ற செயலர் அண்ணாதுரை தமிழ் ஆகியோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு இதற்கு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார். இதை தொடர்ந்து, மின்வாரிய அதிகாரி மற்றும் ஊராட்சிமன்ற செயலர் நேரில் பார்வையிட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு மின்வாரிய பணியாளர்கள் பணிகளை மேற்கொண்டு சேதமடைந்த மின்கம்பத்தை அகற்றி புதிய மின் கம்பம் அமைத்தனர். இதனால் அப்பகுதி குடியிருப்புவாசிகள் மகிழ்ச்சி அடைந்தனர். மேலும் அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.

# மண்ணடி, ஏழு கிணறு பகுதியில் தெரு மின் விளக்கு சீரமைப்பு!

மண்ணடி ஏழு கிணறு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 05, வார்டு 55, அம்மன் கோவில் தெருவில், சி3 ஏழு கிணறு காவல் நிலையம் அருகில் இருக்கக்கூடிய தெரு மின்விளக்கு மரக்கிளைகளால் படர்ந்து இருந்ததால் இரவு நேரத்தில் வெளிச்சமின்றி அந்த பகுதி இருள் சூழ்ந்து காணப்பட்டது. இது தொடர்பாக, மார்னிங் டைம்ஸ் பத்திரிக்கையின் உதவி ஆசிரியர் சம்பந்தப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கவனத்திற்கு எடுத்துச் சென்று உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கேட்டுக் கொண்டார். அதன் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் உத்தரவில், பணியாளர்கள் விரைந்து பணிகளை மேற்கொண்டு படர்ந்திருந்த மறக்கிளைகளை அகற்றினர். அதனையொட்டி தெரு மின் விளக்கு அந்த பகுதியில் வெளிச்சம் பிரகாசமாக காணப்பட்டது







# மழைநீர் கால்வாய் சேதம், பாதசாரிகள் விபத்து அச்சம், பெருநகர சென்னை மாநகராட்சி விரைந்து நடவடிக்கை!

சென்னை வியாசர்பாடி , மகாகவி பாரதி நகர், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 04, வார்டு 36 பகுதியில் 18வது மேற்கு தெருவில் மழைநீர் கால்வாய் அமைக்கப்பட்டு இருந்தது. மழைநீர் கால்வாய் மீது அமைக்கப்பட்ட சிமெண்ட் மூடி உடைந்து, சேதமடைந்து காணப்பட்டது. இரவு நேரத்தில் சாலையோரம் நடந்து செல்லும் பாதசாரிகள், உடைந்த கால்வாயில் நடந்து சென்றால் அசம்பாவிதம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. மேலும், அவற்றில் மண் மற்றும் குப்பை நிரம்பி, கால்வாயில் தண்ணீர் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. எனவே, அந்த பகுதியில் சேதமடைந்த மழைநீர் கால்வாயை மூடியை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என, மார்னிங் டைம்ஸ் பத்திரிகையாளர் சம்பந்தப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு சென்று ஏதேனும் அசம்பாவிதம் நடப்பதற்கு முன் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தார். அதன் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் பணியாளர்களை கொண்டு அந்த பகுதியில் சேதமடைந்த மழைநீர் கால்வாய் மூடி சரிசெய்யப்பட்டது.






# சுற்றுச்சூழலை பாதுக்காப்பு விழிப்புணர்வு

சென்னை மாநகராட்சி நமது நகரத்தை சுத்தமாகவும், பாதுகாப்பாகவும், ஒழுங்காகவும் வைத்திருக்க செயல்படுகிறது. இதில் மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.



**மக்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை:**

குப்பைகளை தெருவில் போடாமல், மாநகராட்சி குப்பை வாகனத்தில் மட்டும் ஒப்படைக்க வேண்டும்

பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்க்க வேண்டும்

குடிநீரை வீணாக்காமல் பாதுகாக்க வேண்டும்

மரங்களை பாதுகாத்து, சுற்றுச்சூழலை காக்க வேண்டும்

திறந்தவெளி கழிப்பை தவிர்க்க வேண்டும்

நிலையான நீர் தேங்காமல் பார்த்து, கொசு பெருக்கத்தை தடுக்க வேண்டும்

சுத்தமான சென்னை – மக்கள் கவனிக்க வேண்டியவை:


“குப்பை வாகனத்தில் போடு, பிளாஸ்டிக் தவிர்க்க, நீர் சேமிக்க, மரம் காப்பாற்று, கழிப்பறை பயன்படுத்த, நீர் தேங்கி கொசு பெருக்காதீர்!”

# LAKSHMI CONSTRUCTIONS

## INDIVIDUAL HOUSE FOR SALE @kovur




9884231978, 7305879469



N.R.K.

செல் : 9383302010
9884242498

**லட்சுமி ஏஜென்ஸீஸ் X+**

கீத்து, மூங்கில், சவுக்கு, கொட்டகை கான்ட்ராக்டர்
லைட் ரூப் சீட், சிமின்ட், செங்கல், மணல், கடப்பா கல்
PVC & GI பைப்ஸ், மெட்டல் சீட், TMT கம்பிகள், எலக்ட்ரிக்கல்,
பிளம்பிங், ஹார்டுவேர்ஸ் & பெயிண்டிங் பொருட்கள்

நெ. 1/ 206, குன்றத்தூர் மெயின் ரோடு,
( கோவூர் EB அருகில் ) கோவூர்,
சென்னை – 600 128.



# கல்விச் சுடரேற்றும் KGN அகாடமி ஒரு தன்னலமற்ற அறப்பயணம்!







**அறிமுகம்**

கல்வியே சமூகத்தின் வலிமை. ஒரு சமூகத்தின் உண்மையான அதிகாரம் அதன் கல்வி வளர்ச்சியில்தான் தங்கியுள்ளது. அந்த உயரிய இலக்கை நோக்கி, "ஜமால் ராபியா நினைவு அறக்கட்டளை" கடந்த இரண்டு ஆண்டுகளாக KGN அகாடமி வாயிலாக மாணவர்களின் வாழ்வில் ஒளிவிளக்காகத் திகழ்கிறது. அறிவைப் பகிரும் பாலமாகவும், மாணவர்களின் நலஎதிர்காலத்தைச் செதுக்கும் களமாகவும் விளங்கும் இந்த அகாடமி, நம்பிக்கையும் அர்ப்பணிப்பும் நிறைந்த ஒரு அறப்பயணத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

**தளராத விடாமுயற்சியும் அர்ப்பணிப்பும்**

2019ஆம் ஆண்டு ரசூல் மொய்தீன் மற்றும் செய்யது அலி ஆகியோரின் பெருமுயற்சியால் KGN அகாடமி உதயமானது. தொடக்கத்தில் மாலை நேர வகுப்புகளாக ஆரம்பிக்கப்பட்ட இந்த கல்வி முயற்சி, மாணவர்களின் தேவையை உணர்ந்து படிப்படியாக வளர்ச்சியடைந்தது. பேரிடர் காலம் போன்ற சவால்கள் நிறைந்த சூழ்நிலைகளிலும் தளராமல், நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கற்றல் பணிகளைத் தடையின்றி தொடர்ந்து நடத்தி, மாணவர்களின் கல்வி பயணம் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொண்டது. மாணவர்களின் நலனையே பிரதான நோக்கமாகக் கொண்டு, தங்களது சுயபங்களிப்புடன் பல சாதனையாளர்களை உருவாக்கி வரும் இந்த அகாடமியின் சேவை, பல கல்வி ஆர்வலர்களை ஈர்த்துள்ளது. அந்த வகையில், அஜீதா அவர்கள் தற்போது இந்த அகாடமியுடன் இணைந்து தனது கல்விச் சேவையைத் தொடங்கியுள்ளார்.

**கல்விப் புரட்சியில் மைல்கற்கள்**

பள்ளிப்பாடங்கள் முதல் NEET & JEE வரை

2022ஆம் ஆண்டு, சென்னை இராயப்பேட்டை – டாக்டர் பெசன்ட் சாலை பகுதியில் KGN அகாடமி ஒரு முழுமையான பயிற்சி மையமாக உருவெடுத்தது. காலத்தின் தேவைக்கும், வருங்கால இந்தியாவின் சிற்பிகளாக உருவாகவிருக்கும் மாணவர்களின் நலனுக்கும் ஏற்ப, 2023 முதல் NEET மற்றும் JEE போன்ற தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளுக்கான சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பொருளாதார பின்னணி எதுவாக இருந்தாலும், தகுதியும் முயற்சியும் கொண்ட மாணவர்கள் மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும் உருவெடுக்கக் கூடிய வாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

E.I.F (Elegant Ink Function) கையெழுத்தும் ஆளுமைத் திறனும் இந்த அறப்பயணத்தின் அடுத்த கட்டமாக, அஜீதா அவர்கள் தனது E.I.F (Elegant Ink Function) எனும் கல்வி முயற்சியை KGN அகாடமியுடன் இணைத்துள்ளார். "நேர்த்தியான கையெழுத்து – சீரான எதிர்காலத்தின் அடித்தளம்" என்ற உயரிய நோக்குடன், 3 வயது முதல் 16+ வயது வரை உள்ள குழந்தைகள் மற்றும் மாணவர்களுக்கு கையெழுத்துப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இது வெறும் எழுத்துப் பயிற்சியாக மட்டுமல்லாமல்,
•சரியான எழுத்து முறை
•மன ஒருமைப்பாடு
•பொறுமை
•நினைவாற்றல்
•ஆளுமை வளர்ச்சி
ஆகிய பண்புகளையும் மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி கற்ற இவர், சமூகத்தின் மீதுள்ள பற்றால் "விதையிலேயே செதுக்கினால் விளைச்சல் அபாரமாக இருக்கும்" என்ற நம்பிக்கையுடன் இந்த அகாடமியுடன் இணைந்து பணியாற்றி வருகிறார்.

**எதிர்காலத் திட்டங்கள் - நவீனமும் விழுமியங்களும்**

மாணவர்களின் வசதிக்காக, சென்னை அண்ணாநகர் பகுதியில் புதிய கிளை ஒன்று, அஜீதா தலைமையில் மேலும் KGN அகாடமி, தனது அறப்பணியை விரிவுபடுத்த கீழ்க்கண்ட முக்கிய திட்டங்களை வகுத்துள்ளது:

•அன்னை ராபியா பெண்கள் அரபிக் கல்லூரி
ஜமால் ஆண்கள் அரபிக் கல்லூரி
•மாணவர்களுக்கான தொழிற்கல்வி மற்றும் காலத்திற்குத் தேவையான AI (செயற்கை நுண்ணறிவு) பயிற்சிகள்
•தமிழகம் முழுவதும் TNPSC போன்ற அரசுத் தேர்வுகளுக்கான பிரத்யேக பயிற்சி மையங்கள்

அன்பான வேண்டுகோள்

தனிமனிதக் கனவாகத் தொடங்கி, இன்று ஒரு சமூகத்தின் நம்பிக்கையாக வளர்ந்து நிற்கும் KGN அகாடமியின் அறப்பணி, மேலும் உயரங்களை எட்ட கல்வி ஆர்வலர்கள் மற்றும் நல் உள்ளங்களின் மேலான ஆதரவை பணிவுடன் வேண்டுகிறது. கூட்டு முயற்சியால் அறிவார்ந்த, வலிமையான இந்தியாவை உருவாக்குவோம்!






நிர்வாகம் : தொடர்புக்கு
தலைமை அலுவலகம்
KGN ACADEMY, Education Services
இராயப்பேட்டை,
சென்னை - 14 76958 45498
தீன் கல்வி +91 86789 32130

அண்ணாநகர் கிளை
அலுவலகம்
எண்.61, 2வது தளம்,
2வது அவின்யூ,
அண்ணாநகர், சென்னை
நிர்வாகம்: +91 7397293752


# இந்திய இராணுவப் படையின் முக்கிய சிறப்புகள்
## அவர்களின் தியாகம்





நாட்டின் பாதுகாப்பே முதன்மை எல்லைகளில் பகலும் இரவும் காவல் காத்து நாட்டை பாதுகாக்கின்றனர். உயர் ஒழுக்கமும் கட்டுப்பாடும்

கடுமையான பயிற்சி, ஒழுக்கம், துணிச்சல் ஆகியவற்றில் சிறந்து விளங்குகிறார்கள். ஒற்றுமையும் தன்னலமற்ற சேவையும் மதம், மொழி, இனம் பார்க்காமல் நாட்டுக்காக ஒன்றிணைந்து சேவை செய்கிறார்கள். பேரிடர் கால சேவை

வெள்ளம், நிலநடுக்கம், புயல் போன்ற பேரிடர்களில் மக்களை காப்பாற்ற முன்னின்று உதவுகிறார்கள். அவர்களின் தியாகம் உயிரையும் நாட்டுக்காக அர்ப்பணிப்பு.

தங்கள் குடும்பத்தைவிட நாட்டின் நலனை உயர்வாக கருதுகின்றனர். கடுமையான சூழ்நிலைகளில் பணியாற்றல்.

பனிப்பாறைகள், பாலைவனங்கள், மலைப்பகுதிகள் போன்ற இடங்களில் சேவை.

நம் அமைதிக்கான விலை – அவர்களின் தியாகம் நாம் அமைதியாக வாழ, அவர்கள் துன்பங்களை எதிர்கொள்கிறார்கள்.








# இரவு-பகல் பாராமல் காவல் காக்கும் மக்களின் பாதுகாவலர்கள் காவல் துறையின் சிறந்த பணிகள்

காவல் துறை என்பது சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்கை நிலைநாட்டும் அடித்தள அமைப்பாகும். மக்கள் நிம்மதியாக வாழ, இரவு-பகல் பாராமல் தன்னலமின்றி பணியாற்றும் மக்களின் பாது காவலர்களே காவல் துறையினர்.

**அவர்களின் சில சிறந்த பணிகள் பின்வருமாறு:** சட்டம் மற்றும் ஒழுங்கு பாதுகாப்பு பொதுமக்களின் உயிர், உடைமை மற்றும் உரிமைகளை பாதுகாக்க சட்டத்தை கடுமையாகவும் நியாயமாகவும் அமல்படுத்துதல்.

**குற்றத் தடுப்பு மற்றும் விசாரணை**

குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பதும், நிகழ்ந்த குற்றங்களை திறம்பட விசாரித்து குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதும்.

**பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு**

பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோருக்கு எதிரான குற்றங்களை தடுப்பது மற்றும் பாதிக்கப்பட் டவர்களுக்கு உடனடி உதவி வழங்குதல்.

**விபத்து மற்றும் அவசர கால உதவி**

சாலை விபத்துகள், தீ விபத்து, இயற்கை பேரிடர்கள் போன்ற அவசர சூழ்நிலைகளில் உடனடி மீட்பு பணிகளில் ஈடுபடுதல்.

**போக்குவரத்து மேலாண்மை**

போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தி, விபத்து களை குறைத்து சாலை பாதுகாப்பை உறுதி செய்தல். பொது அமைதி மற்றும் சமூக நல்லிணக்கம் திருவிழாக் கள், பொதுக்கூட்டங்கள், தேர்தல்கள் போன்ற நேரங் களில் அமைதியை பேணுதல்.

**சைபர் குற்றத் தடுப்பு**

ஆன்லைன் மோசடி, சைபர் குற்றங்களை தடுக்கும் வகையில் விழிப்புணர்வு மற்றும் நடவடிக்கை.

**மக்களுடன் நட்பான காவல் சேவை**

மக்களின் பிரச்சனைகளை கேட்டு, ஆலோசனை வழங்கி, நம்பிக்கையுடன் சேவை செய்தல். காவல் துறை யினர் சட்டத்தை காக்கும் அதிகாரிகள் மட்டு மல்ல; சமூகத்தின் பாதுகாப்பிற்காக தங்கள் உயிரையும் பணை யிடத் தயார் நிலையில் சேவை செய்யும் உண்மையான மக்கள் பாதுகாவலர்கள். அவர்களின் அர்ப்பணிப்பு தான் அமைதியான சமூகத்தின் அடையாளம்.

மார்னிங் டைம்ஸ்
இதழில் தங்களின் மேலான செய்திகள், விளம்பரங்கள் மற்றும் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன
தொடர்புக்கு
9841373226
S.அப்துல் ரஹ்மான்
தலைமைச் செய்தியாளர்



# மத்திய, மாநில அரசு சலுகைகள் (Government Schemes) பெற சில முக்கிய குறிப்புகள்

மத்திய மற்றும் மாநில அரசுகள் பொதுமக்கள், மாணவர்கள், பெண்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோருக்காக பல்வேறு நலத்திட்டங்களை (Subsidy / Scholarship / Scheme) வழங்குகின்றன.

**அவற்றை எளிதாக பெற கீழ்கண்ட குறிப்புகள் உதவும்.**

1. **தகுதி (Eligibility)** தெளிவாக அறிந்து கொள்ளுங்கள்

•வயது, கல்வித் தகுதி, வருமான வரம்பு •சமூக வகுப்பு (SC / ST / BC / MBC / OC) •குடும்ப ஆண்டு வருமானம் தகுதி இல்லையெனில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**2. அவசியமான ஆவணங்களை தயார் வைத்திருங்கள்**

•ஆதார் அட்டை •குடும்ப அட்டை (ரேஷன் கார்டு) •வருமான சான்றிதழ் •சமூக சான்றிதழ் •இருப்பிடம் சான்றிதழ் •வங்கி கணக்கு (Aadhaar இணைப்பு) •கல்வி சான்றிதழ்கள் (மாணவர்களுக்கு)

**3.அதிகாரப்பூர்வ இணையதளங்கள் மூலம் மட்டுமே விண்ணப்பிக்கவும்**

**•மத்திய அரசு:** https://www.india.gov.in

**•தமிழ்நாடு அரசு:** https://www.tn.gov.in

**•மாணவர் உதவித்தொகை:** National Scholarship Portal / TN Scholarship Portal **தனியார் / போலி இணையதளங்களை தவிர்க்கவும்.**

**4. விண்ணப்ப தேதிகளை தவற விடாதீர்கள்**

•ஒவ்வொரு திட்டத்திற்கும் கடைசி தேதி இருக்கும் •தாமதமான விண்ணப்பங்கள் ஏற்கப்படாது Notificationஐ அடிக்கடி பார்க்கும் பழக்கம் வைத்துக் கொள்ளுங்கள்.

**5. ஆன்லைன் விண்ணப்பத்தின் விவரங்களை சரியாக நிரப்புங்கள்**

பெயர், பிறந்த தேதி, வங்கி கணக்கு எண் ஆதார் விவரங்கள் சிறிய பிழையும் (Spelling mistake) விண்ணப்பத்தை நிராகரிக்க காரணமாகும்.

**6. விண்ணப்பத்தின் நிலை (Application Status)** சரிபார்க்கவும் •விண்ணப்ப எண் / பதிவு எண் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுங்கள் •"Approved / Pending / Rejected" நிலையை பார்க்கலாம் நிராகரிக்கப்பட்டால் காரணம் தெரிந்து மீண்டும் முயற்சி செய்யலாம்.

**7. இடைத்தரகர்கள் (Middlemen)**

மீது நம்பிக்கை வைக்காதீர்கள் •அரசு சலுகைகள் இலவசம் "பணம் கொடுத்தால் வாங்கித் தருவோம்" என்றவர்கள் மீது எச்சரிக்கை இது சட்டவிரோதம்.

**8. அரசு அலுவலகங்கள் - சேவை மையங்களை பயன்படுத்துங்கள்**

•e-Sevai Maiyam •Taluk / Block Office •Social Welfare Office சந்தேகம் இருந்தால் நேரடியாக கேட்கலாம்.

**9. உங்கள் உரிமையை கேளுங்கள்**

•தகவல் கிடைக்கவில்லை என்றால் ஸிஜிமி மூலம் கேட்கலாம் •தாமதம் ஏற்பட்டால் மேலதிகாரியிடம் புகார் செய்யலாம்

10. தகவல்களை தொடர்ந்து புதுப்பித்து கொள்ளுங்கள்

•மொபைல் எண், வங்கி கணக்கு, முகவரி மாற்றம் இருந்தால் உடனே புதுப்பிக்கவும் இல்லையெனில் பணம் வராமல் போகும்.

அரசு சலுகைகள் என்பது உரிமை, சரியான தகவல், ஆவணங்கள் மற்றும் விழிப்புணர்வு இருந்தால் மத்திய மற்றும் மாநில அரசு நலத்திட்டங்களை எளிதாக பெற முடியும்.

**மாணவர்கள் / பெண்கள் / விவசாயிகள் / முதியோர்/ மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கான மத்திய - தமிழ்நாடு மாநில அரசு சலுகைகள் பட்டியலாகவும், எளிய விளக்கத்துடன் கொடுக்கப்பட்டுள்ளது**

**1. மாணவர்களுக்கான அரசு சலுகைகள்**

**மத்திய அரசு** •National Scholarship Portal (NSP) SC / ST / OBC / Minority மாணவர்களுக்கு **உதவித்தொகை** •Post-Matric & Pre-Matric Scholarship •PM Yasasvi Scheme – கல்வி ஊக்கத்தொகை •Education Loan Interest Subsidy




**தமிழ்நாடு அரசு** •பள்ளி–கல்லூரி கல்வி உதவித்தொகை •மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி •இலவச கல்வி – SC / ST மாணவர்கள் •Moovalur Ramamirtham Ammaiyar Scheme (மாணவிகளுக்கு மாத உதவி) நன்மை: கல்விச் செலவுகளை குறைத்து படிப்பை தொடர உதவும்

**2. பெண்களுக்கான அரசு சலுகைகள்**

**மத்திய அரசு** •Beti Bachao Beti Padhao •Ujjwala Yojana – இலவச எரிவாயு இணைப்பு •Mahila Shakti Kendra •Mudra Loan (பெண் தொழில்முனைவோர்) **தமிழ்நாடு அரசு** •Kalaignar Magalir Urimai Thogai (குடும்பத் தலைவி பெண்களுக்கு மாதம் 1000) •பெண்களுக்கு இலவச பேருந்து பயணம் •Self Help Group (SHG) **கடன்கள்** •திருமண உதவி திட்டங்கள் **நன்மை:** பொருளாதார சுயநிலை, பாதுகாப்பு, கல்வி

**3. விவசாயிகளுக்கான அரசு சலுகைகள்**

**மத்திய அரசு** •PM-KISAN - ஆண்டுக்கு 6000 •PM Fasal Bima Yojana – பயிர் காப்பீடு •Soil Health Card •Kisan Credit Card (KCC) **தமிழ்நாடு அரசு** •விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் •விதை, உரம், இயந்திர மானியம் •நெல் கொள்முதல் ஆதரவு விலை •மழை பாதிப்பு இழப்பீடு நன்மை: விவசாய வருமான பாதுகாப்பு

**4. முதியோருக்கான அரசு சலுகைகள்**

**மத்திய அரசு** •Indira Gandhi National Old Age Pension Scheme •Ayushman Bharat – மருத்துவ காப்பீடு •Senior Citizen Savings Scheme தமிழ்நாடு அரசு •முதியோர் உதவித்தொகை (மாத ஓய்வூதியம்) •இலவச மருத்துவ சிகிச்சை •**பயண சலுகைகள் நன்மை:** வாழ்வாதாரம் மற்றும் மருத்துவ பாதுகாப்பு

**5. மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு சலுகைகள்**

**மத்திய அரசு** •Unique Disability ID (UDID Card) •Divyang Scholarship Schemes •வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு (Reservation) •உபகரணங்கள் மானியம் **தமிழ்நாடு அரசு** •மாற்றுத்திறனாளிகளுக்கு மாத உதவித்தொகை •இலவச சக்கர நாற்காலி / உபகரணங்கள்

•பயண சலுகை •வேலை மற்றும் கல்வியில் முன்னுரிமை நன்மை: சம வாய்ப்பு மற்றும் சுயநிலை முக்கிய குறிப்பு •அனைத்து சலுகைகளுக்கும் ஆதார், வருமான சான்று, சமூக சான்று, வங்கி கணக்கு அவசியம் •அதிகாரப்பூர்வ அரசு இணையதளங்கள் / e-Sevai மையங்கள் மூலம் மட்டும் விண்ணப்பிக்கவும்

•இடைத்தரகர்களை தவிர்க்கவும்



# நற்சிந்தனை வட்டம் யோக சேவைகள்

யோகா என்றால் ஒற்றுமை என்று பொருள். தொடர்ந்து யோகா பயிற்சி செய்யும்போது, உங்கள் மனம் உங்கள் உடலுடன் இணைந்து செயல்படத் தொடங்குகிறது. யோகா வாழ்க்கைக்கு நேர்மறையான கண்ணோட்டத்தைக் கொண்டுவருகிறது: யோகா உங்கள் மனம், உடல் மற்றும் ஆன்மா இடையே இணக்கத்தை இலட்சியப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது

1. உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது யோகா நெகிழ்வுத்தன்மை, வலிமை மற்றும் சமநிலையை மேம்படுத்த உதவுகிறது. வழக்கமான பயிற்சி தசைகளை நீட்டுகிறது, மூட்டுகளை பலப்படுத்துகிறது மற்றும் தோரணையை மேம்படுத்துகிறது. இது சகிப்புத்தன்மையை அதிகரிக்கிறது மற்றும் உடலை மிகவும் சுறுசுறுப்பாகவும்ஆற்றலுடனும் ஆக்குகிறது.

2. மன ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது மன அழுத்தம் மற்றும் பதட்டத்தை குறைப்பதில் யோகா மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆழ்ந்த சுவாசம் மற்றும் தியானம் மனதை அமைதிப்படுத்துகிறது மற்றும் செறிவை மேம்படுத்த உதவுகிறது

3. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது யோகா இரத்த ஓட்டத்தை மேம்படுத்துகிறது மற்றும் உடல் சிறப்பாக செயல்படஉதவுகிறது. நம் உடலில் உள்ள 11 மண்டல ங்களை பலப்படுத்துகிறது.

4. சுவாசம் மற்றும் நுரையீரல் திறனை மேம்படுத்துகிறது பிராணாயாமம் என்று அழைக்கப்படும் யோகாவில் சுவாசப் பயிற்சிகள் நுரையீரல் செயல்பாட்டை மேம்படுத்த உதவுகின்றன. அவை ஆக்ஸிஜன் உட்கொள்ளலைஅதிகரிக்கின்றன மற்றும் சுவாசத்தை ஆழமாகவும் கட்டுப்படுத்தவும் செய்கின்றன, இது ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்குஉதவியாக இருக்கும்.

5. ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஆதரிக்கிறது யோகா ஒழுக்கம் மற்றும் சுய கட்டுப்பாட்டை ஊக்குவிக்கிறது. தவறாமல் யோகா பயிற்சி செய்பவர்கள்பெரும்பாலும் சிறந்த தூக்கம், சீரான உணவு மற்றும் நேர்மறையான தினசரி வழக்கம் போன்ற ஆரோக்கியமான பழக்கங்களை வளர்த்துக் கொள்கிறார்கள்.


6. சிறந்த கவனம் மற்றும் நினைவகத்திற்கு உதவுகிறது யோகா செறிவு மற்றும் மன தெளிவை மேம்படுத்துகிறது. இது மாணவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும், ஏனெனில் இது கற்றல் திறன்,நி னைவகம் மற்றும் கல்வி செயல்திறனை மேம்படுத்தும். யோகா என்பது ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க ஒரு எளிய மற்றும் இயற்கையான வழியாகும். அனைத்து வயதினரும் யாராலும்,எங்கும் பயிற்சி செய்யலாம். எனவே இந்த அற்புத கலையை தினந்தோறும் அனைவரும் பயிற்சி செய்ய வேண்டும் என்பதற்காக இணையதளம் வழியாகவும் நேரடி யாகவும் இலவச யோகா பயிற்சிகளை மிகச்சிறந்த வல்லுனர்களை கொண்டு நடத்தப்படுகிறது இணையதளம்

zoom id 261 928 0448 Pass code NCVYOGA

மற்றும் இலவச யோகா மையங்கள் போரூர் பொன்னியம்மன் பார்க், ஆழ்வார் திருநகர் திரு.வி.கா பூங்கா, ஏஜிஎஸ் காலனி குடியரசு தின பூங்கா, வேளச்சேரி பல்லவன் மாநகராட்சி பூங்கா, காலை 6:00 மணி முதல் 7.00 மணி வரையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

மேலும் தகவல்களுக்கு 9003075333, 9043283661,9150603999

# இன்பத்தமிழ்
## இசை முரசு
# நாகூர் ஹனிபா
## இதயங்களை வென்ற ஆன்மீகப் பாடல்கர்



நாகூர் ஹனிபாவின் பல பாடல்கள் அரசியல், சமூக விழிப்புணர்வு, மொழியுணர்வு, சுய முன்னேற்றம், அறிவுரைகள் என பல களங்களிலும் மக்களை பண்படுத்தின. அவரது ஆன்மீகப் பாடல்கள் பல இஸ்லாத்தின் கொள்கை கோட்பாடுகளை பரப்புரை செய்யும் வகையில் இருந்தது. முஸ்லிம்களின் விழாக்கால பாடல்களாக அன்றும், இன்றும் அவை ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

முஸ்லிம் சமூகத்தை மட்டுமின்றி, பிற சமயங்களை சேர்ந்தவர்களையும் அவை ஈர்த்தது எனலாம்.

அவரின் குரலுக்காகவும், பாடல்களின் ராகங்களுக்காகவும், அதில் கூறப்பட்ட செய்திகளுக்காகவும், அவை சமயங்களை கடந்தும் ஆளுமை செலுத்தியது என்பதே உண்மை. அக்காலத்தில் திருக்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்புகள் எல்லோருக்கும் கிடைக்காத நிலை இருந்தது. நபிகள் நாயகத்தின் பொன்மொழிகள், வழிகாட்டல் குறித்த நூல்கள் தமிழில் இல்லாத நிலையும் இருந்தது. மார்க்கத்தை கற்றறிந்த அறிஞர்கள் தந்த செய்திகளின் அடிப்படையில்; தாங்கள் வாசித்த தகவல்களின் அடிப்படையில்; பல கவிஞர்கள் நாகூர் ஹனிபாவுக்கு பாடல்களை எழுதி கொடுத்தனர்.

இன்பத் தமிழில்; தேன் சிந்தும் வார்த்தைகளில் எழுதப்பட்ட அந்த பாடல்கள் அவரது கம்பீர குரல் வழியாக இதயங்களை வருடியது. இலங்கை தமிழ் ஈழத்தில் 1896ல் பிறந்த மு.நல்லதம்பி பாவலர் எழுதிய, சின்னச் சின்ன பாலகர்களே... சிங்காரத் தோழர்களே... என்று தொடங்கும் அறிவுரை பாடல் தான், நாகூர் ஹனிபா அவர்கள் இசைத்தட்டுக்காக பாடிய முதல் பாடலாகும். இரண்டாவதாக புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதிய ‘எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு’ என்ற பாடல் ஆகும்.

அவர் பிரபலமான பிறகு அவரது பாடல்கள் எல்லாமே இசைத் தட்டுகளில் பதிவாகின. அவை விற்பனையிலும் சூடு பிடித்தன. நாகூர் ஹனிபாவின் பாடல்கள் மூலம் பலர் சிறந்த வணிகர்களாகவும் உயர்ந்தனர். நாகூர் ஹனிபாவின் பாடல்கள் எல்லாம் ‘ஹனிபா பாடல்கள்’ என்றே பேசப்படுகிறது. அப்பாடல்களை எழுதிய கவிஞர்களை மக்கள் அறியவில்லை. அறிய விரும்பியதும் இல்லை. கவிஞர்கள் கண்ணதாசன், பட்டுக்கோட்டையார், வாலி போன்றோர் எழுதி TMS.சௌந்தராஜன் போன்றோர் பாடிய பல பாடல்கள், இன்றளவும் மக்கள் மத்தியில் எம்ஜிஆர் பாட்டு, சிவாஜி பாட்டு என்றே பேசப்படுகிறது. அது போலத்தான் நாகூர் ஹனிபா பாடிய பாடல்களும், அவரை முன்னிறுத்தி பேசப்படுகிறது. அவருக்கு பாடல்கள் எழுதிக் கொடுத்தவர்கள் மார்க்க அறிஞர்களிடம் செய்திகளை கேட்டும்; தாங்கள் வாசித்த தகவல்களின் அடிப்படையிலும்; தங்களின் அனுபவங்களை வெளிப்படுத்தும் வகையிலும் பாடல்களை எழுதினர்.

மார்க்க பற்றும், தமிழ் புலமையும் உயரிய தரத்தில் அவர்களிடம் இருந்தது. இன்று அது போல் இலக்கியத்தில் எழுதுவதற்கு ஆள் இல்லை என்பது தான் உண்மை. அவர்களில் பலர் முழு நேர கவிஞர்களாக இருந்துள்ளனர். சிலர் தங்களின் வணிகம் மற்றும் வேலைகளுக்கு மத்தியில் தங்கள் இலக்கிய ஆற்றலை பகுதி நேரமாக வெளிப்படுத்துபவர்களாகவும் இருந்துள்ளனர். நாகூர் ஹனிபாஅவர்களுக்கு பாடல்களை எழுதி கொடுத்தவர்களில் முக்கியமானவர் கன்னியாக்குமரி மாவட்டம் திருவிதாங்கோட்டில் பிறந்த பேராசிரியர். அப்துல் கபூர் ஆவார். இவர் அதிராம்பட்டினம் காதர் மொகைதீன் கல்லூரியில் முதல்வராகவும் இருந்தவர். அவர் நாகூர் ஹனிபா அவர்களுக்கு எழுதி கொடுத்த பாடல்கள் ஏராளம்

‘அருளாளன் அன்புடையோன்’ ‘ ஆதி அருள் கனிந்திலங்கி’ போன்ற அவரது பல பாடல்கள் பிரபலமானவை.

குறிப்பாக திருக்குர்ஆனின் தோற்றுவாய் என கொண்டாடப்படும் ‘அல்ஹம்து’ சூராவை இன்பத்தமிழில்; தூய இலக்கியத்தில்; கவிதை வடிவில்; மொழி பெயர்த்தவர்கள் பலர். அதில் கவிஞர் கண்ணதாசன் போன்றோரும் உண்டு.

அதில் இவர் எழுதியதுதான் பாடலாக மாறி, பெரிய அளவில் பேசப்பட்டது. இன்றும் பேசப்படுகிறது. ‘அருளன்பு பண்பில் அளவற்ற உன்றன் திருநாமம் போற்றித் திறக்கின்றோம் அல்லாஹ்’ என்ற பாடல் ஆகும் .

அதிகாலையில் (சுபுஹுு)தொழுகைக்குப் பிறகு இப்பாடலை கேட்பவர்கள் பரவசமடைந்து, அதில் தங்கள் மனதை பறிகொடுப்பார்கள். நாகூரில் 1916ல் பிறந்த புலவர் மு.ஜெயினுலாபுதீன் என்பவர், தாய் தமிழ் மட்டுமின்றி உருது, பர்மி, மலாய், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளிலும் கவி பாடுபவர். ‘ஈட்டியின் முனையில் நிறுத்திய போதும் ஈமான் இழக்க மாட்டோம்‘ என்ற வரிகள் அதிரும் ‘இறைவன் மீதாணை’ என்ற தேசப்பற்று பாடலை எழுதியவர்.

‘இதுதான் நாங்கள் செய்த துரோகமா...’

‘மலையாள கரைதனிலே ரத்த ஆற்று ஓட்டம்‘ என்பது போன்ற சுதந்திரப் போராட்ட வரலாறுகளை கூறும் உணர்ச்சிமிகு பாடல்களையும் எழுதியவர் ஆவார். இவர்தான் நாகூர் ஹனிபாவுக்கு அதிகமான பாடல்கள் எழுதியவர் என்றும் கூறப்படுகிறது. சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் 1925 ல் பிறந்த கவிஞர் தா.காசிம் அவர்கள் எழுதிய

‘தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு’

‘தீன்குலக் கண்ணு திருமறைப் பொண்ணு,

‘தாயிப் நகரத்து வீதியிலே.’

‘உலகத்தில் நான் உன்னருளை உவந்திடத்தான் பாடுகின்றேன்’

‘வானில் தவழும் வெண்ணிலவே’

‘மணலில் நடந்து இருளை கடந்து’

என்பது போன்ற இவரது பாடல்கள் இனிமையானவை.

நாகூர் ஹனிபாவுக்கு இது நூற்றாண்டு என்றால், கவிஞர் தா.காசிம் அவர்களுக்கும் இதுவே நூற்றாண்டு என்பது குறிப்பிடத்தக்கதாகும். மயிலாடுதுறை மாவட்டம் கிளியனுரைச் சேர்ந்த R.அப்துல் சலாம் எழுதிய பல பாடல்கள் நாகூர் ஹனிபாவின் குரலில் ‘சூப்பர் ஹிட்’ ஆயின.

இவரின் ‘இறைவனிடம் கையேந்துங்கள்’ என்ற பாடல், ஒரு மதச்சார்பற்ற பாடலாக இன்றும் கொண்டாடப்படுகிறது.

‘இருளில் நிலவாக பிறந்தார் ‘

‘இறைவா உன்னை தேடுகிறேன்’

‘மக்கத்து மலரே மாணிக்கச் சுடரே’ என்பது போன்ற

பல பாடல்களை எழுதியவரும் இவரே. அடிப்படையில் இவர் துணிக்கடை வணிகராக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. நாகூரில் 1936ல் பிறந்த கவிஞர் சலீம் அவர்கள், நாகூர் ஹனிபாவுக்கு ஏராளமான பாடல்களை எழுதியவர்களில் ஒருவர்.

'உலக மக்கள் யாவருக்கும் '

'தீனோரே ஞாயமா மாறலாமா?

போன்ற பாடல்களை வண்ணதாசன் என்ற புனைப்பெயரில் எழுதினார். 'திருமறையில் அருள்மொழியில் விளைந்திருப்பது என்ன? என்ற புகழ்பெற்ற கேள்வி பதில் பாடலையும் இவர் தான் எழுதினார். நாகூர் ஹனிபா வாழ்ந்த காலத்தில், வலம் வந்த மற்றொரு பாடகரான காயல். ஷேக் முகமது அவர்களுக்கு, 'கப்பலுக்கு போன மச்சான்...' என்ற பாடலை எழுதியவரும் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பாடல் குடும்பத்தை பிரிந்து வெளிநாடுகளில் சென்று வசித்து விட்டு, ஓராண்டுக்கு அல்லது இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை ஊருக்கு வரும் அனைவரையும் இப்போதும் உருக்கக்கூடியதாக இருக்கிறது. நாகை மாவட்டம் பொரவச்சேரி அருகே சிக்கலில் 1923ல் பிறந்தவர் கவிஞர் அப்துர் ரஹீம். இவர் மதிதாசன் என்ற பெயரில் பாடல்களை எழுதினார் . 'எண்பது கோடி தீனோர் நெஞ்சில் இலங்கும் நபியே ஜிந்தாபாத்...' 'கண்கள் குளமாகுதம்மா கர்பலாவை நினைக்கையிலே' போன்ற இவரது பாடல்கள் பிரபலமானவை.

கன்னியாகுமரி மாவட்டம் திருவிதாங்கோட்டில் 1943ல் பிறந்தவர் கவிஞர் திருவை.அப்துல் ரகுமான் ஆவார். 'ஞானத்தின் திறவுகோல் நபி நாயகம் அல்லவா' என்று இவரது பாடல் சிந்தனை வளமிக்கதாகும். நாகை மாவட்டம் பாக்கம் கோட்டூரில் 1935ஆம் ஆண்டு பிறந்தவர் கவிஞர் தாஜுதீன். பிரபல தமிழ் உணர்வாளரும், எம்ஜிஆர் மற்றும் கலைஞருடன் நெருக்கமாக பழகியவருமான, கவிஞர் கா.மு.ஷெரிப் அவர்கள் பிறந்து வளர்ந்த திருவாரூர் மாவட்டம் அபிவிருத்தீஸ்வரத்தில், வசித்ததால், இவர் அபிவை. ஜி.வி.வி. தாஜுதீன் என்று அறியப்படுகிறார்.

'அல்லாஹ் உந்தன் ஆற்றல் எல்லாம்'

'உதயமே நபி உதயமே' என்பது போன்றவை இவரது பாடல்கள் இலக்கிய சுவை நிறைந்ததாகும் 'எத்தனை தொல்லைகள் என்னென்ன துன்பங்கள்' என்ற நபிகள் நாயகம் சந்தித்த துயரங்களை கூறி, உருக்கத்தை வெளிப்படுத்தும் பாடலும் இவருடையதே!

கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய் பட்டினத்தில் 1956ல் பிறந்த கவிஞர் தேங்கை. சர்புதீன் மிஸ்பாகி அவர்களும் பல பாடல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய 'மக்கம் பிறந்த நபி' என்ற பாடல் குறிப்பிடத்தக்கது. ஈரான் துருக்கி ஆப்கானிய சூஃபி மரபு ராகத்தில் 'ஹஸ்பி ரப்பி ஜல்லல்லாஹ்' என்ற பாடலை எழுதி அற்புதமான கவிதைகளை அதில் மணக்க செய்தவரும் இவரே! நெல்லை மாவட்டம் வீரவநல்லூரில் பிறந்தவர் கவிஞர். வீரை . அப்துல் ரகுமான்.

'நினைத்தாலே அருட் கதவு திறந்து விடும்'

'ரமலான் புனித ரமலான்'

'ஐந்து கடமைகளில் எத்தனை தத்துவங்கள்'


போன்ற பல பாடல்களை இவர் தான் எழுதினார்.

இவர்கள் மட்டுமின்றி, கூத்தாநல்லூரை சேர்ந்த கவிஞர் சாரண பாஸ்கரன், நாகூர் சாதிக், கவிஞர் ஹிலால் முஸ்தபா, தத்துவ கவிஞர் பத்ருதீன், கவிஞர் ஷாகிர் அப்துல் ரஹீம் என பலரும் அவருக்கு பாடல்களை எழுதியதாக செ திவான் அவர்கள் தனது இசை முரசு அல்ஹாஜ் நாகூர் இ.எம்.ஹனிபா என்ற நூலில் குறிப்பிடுகிறார். நாகூர் ஹனிபாவுக்கு சிறப்பு சேர்க்கும் போதெல்லாம், அவருக்கு பாடல் எழுதிக் கொடுத்த இவர்களையும் நினைவு கூற வேண்டும். நாகூர் ஹனிபாவின் சில பாடல்களில் மார்க்கத்தின் கொள்கைகளுக்கு எதிரான சில கருத்துகள் இருக்கிறது என்ற குற்றச்சாட்டுகள் உண்டு.

அதற்கு அவர் காரணம் அல்ல. பாடல்களை எழுதிக் கொடுத்த படைப்பாளிகளைதான் விமர்சிக்க வேண்டும் என பிரபல மார்க்க அறிஞர் கம்பம். பீர்முஹம்மது பாகவி கூறுகிறார். அந்த படைப்பாளிகளும் கூட, அப்போது நிலவிய சமூக புரிதலின் அடிப்படையில் எழுதியவை என்றே இதனை புரிந்து கொள்ள வேண்டும். ஒரு சில மார்க்க அறிஞர்கள் இப்படி இசையுடன் பாடுவதா? என்றும் அவரிடம் கேட்டுள்ளனர். அப்படி என்றால் நீங்கள் எல்லோரும் கூடி ஒரு முடிவு எடுத்து அறிவியுங்கள். நான் பாடல்களை பாடுவதே நிறுத்தி விடுகிறேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

உடன்பாடுகள், முரண்பாடுகள், பாராட்டுக்கள், விமர்சனங்களுக்கு மத்தியிலும் அவரது பாடல்கள் காற்றில் உலவிக்கொண்டே இருக்கிறது.

# எந்நேரத்திலும் இறைவன்



ஒருமுறை ஆசிரியர் தன் மாணவர்களிடம் பாடம் கற்பிக்கையில் செய்முறைப் பயிற்சி ஒன்றை செய்யச் சொன்னார்.

ஒரு உயிருள்ள கோழியை கையில் கொடுத்து இதை யாருமே பார்க்காத இடத்தில் கொண்டு சென்று, அந்தக் கோழியை வெட்டி துண்டுகளாக்கிக் கொண்டு வர வேண்டும் என்பதுதான் அந்தச் செய்முறைப் பயிற்சி.

எல்லோரும் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று வெட்டி எடுத்து வந்து ஆசிரியரிடம் காட்டி பெருமைப்பட்டுக் கொண்டனர்.

ஆனால் ஒரு மாணவன் மட்டும் என்னால் இந்தக் கோழியை யாருமே பார்க்காத இடத்தில் வெட்ட முடியாது.

ஏனென்றால் நம்மை படைத்த இறைவன், எந்நேரமும் எல்லா இடங்களிலும் நம்மை கண்காணித்துக் கொண்டே இருக்கிறான் என்று சொன்னான்.

மாணவனின் இந்த பதிலை கேட்டவுடன் ஆசிரியர் மனம் நெகிழ்ந்து, அந்த மாணவரை கட்டித்தழுவி இந்த நன்னெறி போதனையை எல்லா மாணவர்களுக்கும் எடுத்து வைத்தார்.

நாமும் இந்த அறிவுறையை நம்முடைய பிள்ளைகளுக்கும் எடுத்துச் சொல்லி அவர்களை நல்வழியில் நடக்கச் செய்வது சாலச் சிறந்ததாகும்.

(அன்சாரி ஹபஷியா)

# மோட்டார் வாகன சட்டம் - மக்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை

மோட்டார் வாகன சட்டம் என்பது சாலைப் பாதுகாப்பை உறுதிசெய்யவும், விபத்துகளை குறைக்கவும் உருவாக்கப்பட்ட சட்டமாகும். மக்கள் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய சில முக்கிய அம்சங்கள்: வாகன பதிவு (RC) அனைத்து மோட்டார் வாகனங்களும் அரசால் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஓட்டுநர் உரிமம் (Driving Licence) செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்டுவது சட்டவிரோதம். காப்பீடு (Insurance) மூன்றாம் நபர் காப்பீடு (Third Party Insurance) கட்டாயம்.




ஹெல்மெட் - சீட் பெல்ட் இருசக்கர வாகனங்களுக்கு ஹெல்மெட், நான்கு சக்கர வாகனங்களுக்கு சீட் பெல்ட் கட்டாயம். வேக வரம்பு (Speed Limit) நிர்ணயிக்கப்பட்ட வேக வரம்பை மீறக் கூடாது. மது அருந்தி வாகனம் ஓட்டுதல் மதுபோதையில் வாகனம் ஓட்டுவது கடும் தண்டனைக்குரியது. சிக்னல் - சாலை விதிகள் போக்குவரத்து சிக்னல்கள் மற்றும் சாலை விதிகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். அபராதம் - தண்டனை

விதிமீறல்களுக்கு அபராதம், உரிமம் ரத்து போன்ற தண்டனைகள் விதிக்கப்படும். சாலை பாதுகாப்பு அனைவரின் பொறுப்பு. விதிகளை பின்பற்றி பாதுகாப்பாக பயணம் செய்வோம். மோட்டார் வாகன சட்டம் (Motor Vehicle Act) படி போக்குவரத்து விதிமீறல்களுக்கு எவ்வளவு அபராதம் (fine) விதிக்கப்படும் என்பதற்கான முக்கிய தகவல்கள் (இந்தியாவில் 2025இல் புதிய அபராதங்கள் அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளன) பொது அபராதங்கள் (New Fines 2025)

ஹெல்மெட் அணியாமல் இருசக்கர வாகனம் ஓட்டினால்
1,000 அபராதம் + 3 மாதங்கள் டிரைவிங் லைசென்ஸ் இடைநீக்கம்

சீட் பெல்ட் அணியாமல் கார் ஓட்டினால்
1,000 அபராதம்

மதுபோதையில் வாகனம் ஓட்டினால்
10,000 வரை அபராதம் / 6 மாதங்கள் வரை சிறை
(மீண்டும் செய்தால்: 15,000 + 2 ஆண்டு சிறை)

டிரைவிங் லைசென்ஸ் இல்லாமல் வாகனம் ஓட்டினால்
5,000 அபராதம்

இன்சூரன்ஸ் இல்லாமல் வாகனம் ஓட்டினால்
2,000 அபராதம் + 3 மாதங்கள் சிறை (மீண்டும் செய்தால் 4,000)

வேகக்கட்டுப்பாட்டை மீறினால் (Overspeed)
1,000 – 2,000 அபராதம் (வாகன வகைக்கு ஏற்ப)

வாகனம் ஓட்டும் போது மொபைல் போன் பயன்படுத்தினால்
5,000 அபராதம்

சிக்னல் மீறல் / தவறான பாதையில் ஓட்டுதல்
1,000 அபராதம்


PUC (புகை வெளியீட்டு சான்று) இல்லையெனில் 10,000 அபராதம்

சிறுவர்கள் (18 வயதுக்குக் கீழ்) வாகனம் ஓட்டினால்
25,000 அபராதம்
வாகன உரிமையாளருக்கு 3 ஆண்டுகள் வரை சிறை
வாகன பதிவு ரத்து

அதிக சத்தம் / மாற்றிய சைலன்சர் (Modified Silencer)
1,000 – 2,000 அபராதம்

விபத்துக்குப் பிறகு தப்பிச் சென்றால் (Hit & Run)
கடும் அபராதம் + சிறை தண்டனை

# நீதிமன்றத்தை (Neethi Manram) எதற்காக நாடலாம்?



நமது உரிமைகள் பாதுகாக்கப்படவும், நீதி கிடைக்கவும் நீதிமன்றத்தை நாடலாம். முக்கிய காரணங்கள் நீதி பெற அநியாயம் நடந்தால், சரியான தீர்ப்பு பெற. உரிமைகளை பாதுகாக்க சொத்து உரிமை, வேலை உரிமை, மனித உரிமை போன்றவை மீறப்பட்டால். குற்ற வழக்குகள் தொடர்பாக திருட்டு, மோசடி, தாக்குதல் போன்ற குற்றங்களில் புகார் அளிக்க. சிவில் வழக்குகள் நிலம், வீடு, பணம், ஒப்பந்தம் தொடர்பான தகராறுகள். குடும்ப பிரச்சினைகள் விவாகரத்து, பராமரிப்பு தொகை, குழந்தை காவல் (custody) போன்றவை. அரசு / அதிகாரிகளின் தவறுகள் அரசு உத்தரவு, அபராதம், பணிநீக்கம் போன்றவற்றை எதிர்க்க. அபராதம் அல்லது தண்டனைக்கு எதிராக தவறான அபராதம், லைசென்ஸ் ரத்து போன்றவற்றுக்கு மேல் முறையீடு செய்ய. சட்ட விளக்கம் அல்லது உத்தரவு பெற சட்டப்படி செய்யலாமா இல்லையா என்ற சந்தேகத்திற்கு தீர்வு பெற. நியாயம் கிடைக்காதபோது, சட்டப்படி தீர்வு பெற நீதிமன்றத்தை நாடலாம்.

# தீயணைப்பு துறையின் முக்கியத்துவம்

தீயணைப்பு துறை என்பது மக்களின் உயிர் பாதுகாக்கும் மிக முக்கியமான சேவை துறையாகும். தீ விபத்து, வெடிப்பு, சாலை விபத்து, இயற்கை பேரிடர்கள் போன்ற அவசர நிலைகளில் உடனடியாக செயல்பட்டு உயிர்களை காப்பாற்றுகிறது.




தீயணைப்பு வீரர்கள் உயிரை பணயம் வைத்து பிறரின் உயிர்களை காப்பாற்றுகின்றனர். தீப்பற்றிய கட்டிடங்களில் புகுந்து மக்களை மீட்பது, விபத்தில் சிக்கியவர்களை பாதுகாப்பாக வெளியே கொண்டு வருவது போன்ற பணிகளை அவர்கள் துணிச்சலுடன் செய்கிறார்கள்.

மேலும், தீயணைப்பு துறை விபத்துகளைத் தடுக்கும் விழிப்புணர்வையும் மக்களிடையே ஏற்படுத்துகிறது. தீ பாதுகாப்பு முறைகள், அவசர கால நடைமுறைகள் குறித்து பொதுமக்களுக்கு பயிற்சி மற்றும் அறிவுரை வழங்குகிறது.

தீயணைப்பு துறை இல்லாமல் சமூக பாதுகாப்பு முழுமையடையாது. அவர்களின் தியாகமும் சேவையும் நமது வாழ்வை பாதுகாக்கும் அடித்தளமாக உள்ளது.

# சூரியனின் முக்கியத்துவம்



உலகத்திற்கு ஒளி மற்றும் வெப்பம் வழங்குவது சூரியன் இல்லாமல் பூமி இருளில் மூழ்கி, வாழ்வுக்கு தேவையான வெப்பமும் ஒளியும் கிடைக்காது. தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள் ஆகியோருக்கு உயிர் நிலை படைக்கும் முக்கிய ஆதாரம். உயிரினங்களின் உயிர்க்காலம் சூரிய ஒளி தாவரங்களில் போட்டோசிந்தசிஸ் (Photosynthesis) செயல்முறையை இயக்கு, ஆகவே உணவு சங்கிலி முழுவதும் சுழலும்.

மனிதர்கள் சூரிய ஒளியில் இருந்து விட்டமின் D பெறுகிறார்கள், இது எலும்புகள் மற்றும் நரம்புகள் ஆரோக்கியத்திற்கு அவசியம். கால அளவீடு மற்றும் காலநிலை பூமியின் தினமும் சுற்றும் இயக்கத்தினால் காலை, மாலை, இரவு, தினசரி நேரம் வரையறுக்கப்படுகிறது. வானிலை, பருவநிலை ஆகியவை சூரியனின் பாதிப்பால் மாறும். மின்சாரம் உற்பத்திக்கு உதவி சூரிய ஒளி மற்றும் வெப்பத்தை பயன்படுத்தி சூரிய சக்தி (Solar Energy) உருவாக்கப்படுகிறது, இது சுத்தமான மின்சாரம் தருகிறது.

புவி சூழலையும் பாதுகாக்க உதவி சூரிய சக்தியை பயன்படுத்துவதால், போக்குவரத்து, தொழிற்சாலை போன்றவற்றில் வாயுவாசனக் குறைவு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற பலன் கிடைக்கிறது. "சூரியன் இல்லாமல் உலகில் உயிர் சுழற்சி முடியாது" நம் வாழ்வின் அடிப்படை ஆதாரமும், இயற்கையின் உயிர் மூலமும் ஆகிறது.



**இருசக்கர வாகனம்**
**ஓட்டும் போது**
**கட்டாயம் தலைக்கவசம்**
**இருவரும் அணிய வேண்டும்**

Published and Printed by **S.ABDUL RAHMAN** Printed at **CHENNAI OFFSET PRINTERS,** No.19/1, 21/2, Kitabathkhan Bhadur Street, Ellies Road, Chennai - 600 002. and Published from No. 15/9, Thondaikhan Makhan 2nd Lane, Ice House, Triplicane,Chennai - 600 005.
Editor : **K.N.ABDUL SAMAD**

# ஊராட்சி வார்டு உறுப்பினரின் மகத்தான பணிகள் மற்றும் செயல்பாடுகள்



தமிழ்நாடு ஊராட்சி மன்றங்கள் தமிழ்நாட்டில் 500 நபர்களும் அதற்கும் அதிகமான மக்கள் தொகையுடைய ஊர்களை ஊராட்சிகளாகப் பிரித்துள்ளனர். இந்த கிராம ஊராட்சிகளுக்கு அதன் மக்கள் தொகைக்கு ஏற்ப வார்டுகள் பிரிக்கப்படுகின்றன. இந்த வார்டுகளில் வாக்காளர்களாக உள்ள மக்களால் ஊராட்சி மன்றத்திற்கு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். இந்த ஊராட்சி மன்றங்களின் உறுப்பினர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாக இருக்கிறது. இந்த ஊராட்சி மன்றத்திற்கான தலைவர் மக்களால் நேரடியாகத் தலைவர் தேர்வு செய்யப் படுகின்றார். இந்த ஊராட்சி மன்றத்திற்கான துணைத் தலைவர் ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படுகின்றார். ஊராட்சியின் உறுப்பினர்களைக் கொண்டு நடத்தப்படும் ஊராட்சி மன்றக் கூட்டங்களில் பெரும்பான்மையான உறுப்பினர்களைக் கொண்டு நிறைவேற்றப்படும் தீர்மானங்களின்படி ஊராட்சி மன்றத்தலைவரே அந்தப் பணிகளை தனக்கு கீழுள்ள ஊழியர்களைக் கொண்டு செயல்படுத்துகிறார்.

**அதன் அடிப்படையில், செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியம் கானத்தூர் ரெட்டிக்குப்பம் ஊராட்சி பகுதியில், ஊராட்சி மன்றத் தலைவர் வள்ளி எட்டியப்பன் முழு ஒத்துழைப்புடன், இரண்டாவது வார்டு உறுப்பினர் K.செய்யது இப்ராஹிம் பணி பற்றி பொதுமக்கள் கருத்துக்களை மார்னிங் டைம்ஸ் பத்திரிக்கை வெளியிட்ட அறிக்கை....**

கானத்தூர் ரெட்டிக் குப்பம் ஊராட்சியில் மக்களின் தேவைகள் அறிந்து இரண்டாவது வார்டுக்கு உட்பட்ட பகுதியில் பஞ்சாயத்து மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் சுத்தப்படுத்துதல், மழைநீர் வடிகால் தூர்வாறுதல், தெரு குழாய் சரி செய்தல், புதிய சாலை அமைத்தல், வேகத்தடை அமைத்தல், தெருவிளக்கு சரி செய்தல், கொசு மருந்து தெளித்தல், குறிப்பாக இரவு நேரங்களில் பஞ்சாயத்து சார்பில் மின்சார ஊழியர்களை நியமினம் செய்து, மின்சாரம் துண்டிக்கப் படும் நேரத்தில் உடனே மின்சார ஊழியர்களை தொடர்பு கொண்டு மின்சாரம் வழங்கவும் என அனைத்து பணி களையும் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். அதேசமயம், அப்பகுதி மக்கள் தினந் தோறும் சேகரிக்கும் குப்பைகளை இல்லம் தேடி தினசரி துப்புரவு வாகனங்களை அனுப்பி தேவையற்ற குப்பைகளை அப்புறப்படுத்துதல், வார்டு பகுதியில் தூய்மை பணியாளர்களுக்கு பஞ்சாயத்து மூலம் உபகரணங்கள் வழங்குதல், வார்டில் ஏழை, எளிய மக்களுக்கு தமிழக அரசின் திட்டங்களை முறையாக ஒன்றியத்திலிருந்து பெற்று மக்களின் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக, பிலால் நகர் பிரதான சாலையில் மிகவும் மோசமான நிலையில் அசுத்தமற்ற குப்பை கிடங்கை அகற்றி சுத்தம் செய்து அப்பகுதியில் பிரதான சாலையில் நுழைவு வாயில் அமைத்து, கண்காணிப்பு கேமரா பொறுத்தப்பட்டு குற்ற சம்பவங்கள் நடைபெறாத வண்ணம் பாதுகாத்தல், மழை காலத்தில் மழைநீர் தேங்காதவாறு சாலையில் மழைநீர் வடிகால் அமைத்து மழைநீர் வடிந்து செல்ல ஏற்பாடு செய்தல், இந்த செயல் அப்பகுதியில் பொது மக்களிடம் பெரிதும் வரவேற்பை பெற்றது.



மேலும், தன்னுடைய வார்டில் மிகவும் பின்தங்கிய இரு நபர்களுக்கு சுற்றுச்சுவர் மேல் கூரை மாற்றி அமைத்து கொடுத்துள்ளார். இதை தொடர்ந்து, பள்ளி மாணவ மாணவியருக்கு கல்வி கட்டணம் செலுத்தி கல்வியில் மேலும் சிறப்பாக செயல்பட உதவி செய்தல், பெண்களுக்கு திருமண உதவி, பொது மக்களுக்கு மருத்துவ உதவி, தேசிய அளவிலான கபடி போட்டியில் பங்கேற்று பதக்கம் வென்ற மாணவியை வாழ்த்தி பரிசு தொகை வழங்குதல் போன்ற செயல்களை செய்து வருவது குறிப்பிடத்தக்கது. ஊராட்சி பகுதியில் வார்டு மட்டுமில்லாமல், மழை வெள்ள காலங்களில் ஊராட்சி உட்பட்ட அனைத்து பகுதியிலும் இரண்டாவது வார்டு உறுப்பினர் இரவு, பகல் பாராமல் இது போன்ற சிறப்பான பணிகளை செய்து வருவதால் தனது வார்டு மற்றும் ஊராட்சி மக்களிடம் சிறந்து விளங்குகிறார்.



REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA-TNTAM/2021/81736 MORNING TIMES - TAMIL MONTHLY

# MANGROVE FOUNDATION OF INDIA

**REHABILITATION AND PROTECTION OF TROPICAL MANGROVE ECOSYSTEMS AS A CONTRIBUTION TO CLIMATE AND COASTAL PROTECTION, TO THE CONSERVATION OF BIODIVERSITY AS WELL AS THE NATURAL LIVELIHOODS IN INDIA**

## MISSION

To accelerate alternative livelihoods and restore threatened biodiverse Landscapes through the expansion and management of Mangroves ecosystems

## VISION

To Create Climate Resilient Communities through Education and Ecological Action



## Ecosystem Restoration

MFI leads community-based mangrove and wetland restoration efforts, planting native species, protecting coastal landscapes, and enhancing biodiversity to rebuild resilient ecosystems.

## Agroforestry

Through sustainable agroforestry and carbon credit projects, MFI helps farmers adopt climate-smart practices that restore land health while generating additional income and sequestering carbon.





## Community Development

MFI empowers local communities—especially women and marginalized groups, by integrating ecological conservation with livelihood enhancement, self-help group support, skills training, and inclusive development.

## Education

The foundation conducts environmental education and awareness programmes in schools, universities and communities, promoting sustainability, climate literacy, life-skills, and stewardship of natural resources.



S Meerasa, No.42, Mosque Street, Jameelabath, Pulicat, Pulicat Post, Ponneri (Tk), Tiruvallur (Dist.) - 601205, Tamil Nadu, India.

mfipulicat@gmail.com +91 98437 47971; +91 8072077327

www.mangrovefoundationindia.com